5 நாவல் ஸ்பெஷல்

# வெற்றிக் கோடு



பட்டுக்கோட்டை பிரபாகர்

# 1

**வா**னத்தில் நட்சத்திரப் புள்ளிகளைத் தவிர, மற்றபடி தார் டின்னைக் கவிழ்த்தது போல கறுப்பு. பகலின் உஷ்ணத்திற்கு நஷ்ட ஈடாக கடலில் குளித்து வந்த ஈரமான காற்று கடற்கரைககு வந்தவர்களை கிச்சுகிச்சு செய்து கொண்டிருந்தது.

கோட்டூர்புரம் பாலம் கடந்ததும் இடது புறம் மனோகர் நகர் இருந்தது. மனோகர் நகர் பாட்டியின் பல் வரிசை போல் அங்கங்கே காலி மனைகளுடன் இருந்தது. சில வீடுகள் எலும்புக் கூடு நிலையில் இருக்க, சில வீடுகள் வர்ணம் பூசும் அலங்காரத்தில் இருக்க, சில வீடுகள் முந்தா நாள் கிரகப் பிரவேசம் முடித்து உருவம் வரையப்பட்ட புதுப் பூசணிக்காய்களுடன் மின்ன...

அவன் தன் பைக்கை 'ஆலயம்' என்ற முகப்பில் சலவைக்கல் பதித்த ஒரு தனி வீட்டின் முன்னால் நிறுத்தி இறங்கினான். எஞ்சினை அணைக்காமல், பைக்கை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி ஹெட்லைட் வெளிச்சத்தை வீட்டின் வாசலில் தொங்கும் பூட்டின் மேல் அடிக்கும்படி அமைத்துவிட்டுப் போய் சாவி போட்டு திறந்தான்.

சின்ன வராந்தாவில் இருந்த சுவிட்சைப் போட்டு முன்புறம் வெளிச்சமாக்கிய பிறகு மறுபடி வாசலுக்கு வந்து எஞ்சினை அணைத்து, நெக்லாக் செய்துவிட்டு வீட்டுக்குள் வந்து கதவை மூடிக்கொண்டான்.

மாடி எதுவுமில்லாத அறுநூறு சதுர அடிகளை மொத்தமாகக் கொண்ட சின்ன, தனி வீடு. கதவு



திறந்ததும், செருப்பு கழற்றிப் போட மட்டுமே அனுமதிக்கும் சிறிய வராந்தா. இரவில் சிரமப்பட்டு பைக்கை ஏற்றி அங்கே நிறுத்துவான்.

உள்ளே உடனடியாக ஒரு சதுர ஹால். மொசைக்தரை சிமெண்ட்ஸ்லாப்களாலேயே அமைக்கப்பட்ட கதவில்லாத ஒரு அலமாரி. வயரால் பின்னப்பட்ட இரண்டு நாற்காலிகள். மூலையில் சக்கரங்கள் பொருத்தின ஸ்டாண்டின் மேல் பி.பி.எல். கலர் டி.வி.யும். வீடியோ டெக்கும்.

அருகில் உள்ளக் கதவைத் திறந்தால் விசாலமான, இரண்டு ஜன்னல்கள் கொண்ட படுக்கையறை. அங்கே இரும்புக் கட்டில். ஒற்றைக் கட்டில். நைலான் கொடிக் கயிற்றில் போடப்பட்ட உடைகளைத் தவிர ஒன்றிரண்டு கட்டில்மேலும், நாற்காலி முதுகிலும், சுவர் ஆணியில் மாட்டப்பட்ட கிதார் வாத்தியம். மேஜை மேல் சின்ன பிளாஸ்டிக் பிரேமுக்குள் ஐந்து வருடங்களுக்கு முன்பு எடுத்துக் கொண்ட புகைப்படத்தில் கேமிரா பார்த்து புன்னகைக்க முயன்ற அவன்.

ஹாலைத் தாண்டினால் வலது புறம் மற்றொரு சின்ன அறை. எதிரே இடது புறம் சமையல் அறை. கடப்பா கல் போட்ட மேடை மேல் கேஸ் அடுப்பு மளிகை சாமான்கள் கொண்ட கிளாஸ் பாட்டில்கள் ஒரு சுவர் ஸ்டாண்டில், மேடை மேல் காலையில் கத்தரித்து எடுத்துவிட்டு, கழுவிப் போடாத பால் பாக்கெட்டின் பாலீத்தின் கவரை மொய்த்துக் கொண்டு எறும்புகள்.

அவன் கதவைச் சாத்தினதும் ஷூவைக் கழற்றிப் போட்டான். படுக்கையறைக்குள் சென்று சாக்ஸ் கால்களுடன் தொப்பென்று கட்டிலில் விழுந்தான். கையருகில் தொங்கின சுவிட்சைப் போட்டதும்

மின் விசிறி சுழன்றது.

சில நிமிடங்கள் கண்மூடி படுத்திருந்த அவன் படுத்தபடியே சாக்ஸ் கழற்றி ஏதோ ஒரு திசையில் வீசினான். வாட்ச்சைக் கழற்றி அருகில் மேஜை மேல் வைத்தான். கண்ணைத் திறந்து சுழலும் மின் விசிறியைக் கொஞ்ச நேரம் பார்த்தான்.

எழுந்தான், சட்டையைக் கழற்றி கொடியில் போட்டான். தன் பாக்கெட்டிலிருந்து பைக் சாவியும், சில நாயணங்களும் கீழே சிதறின. குனிந்து பொறுக்கினான். கட்டிலுக்கு அடியில் ஓடின ஒரு நாணயத்தைக் குனிந்து தேடியும் தட்டுப்படாததால் அலட்சியப்படுத்திவிட்டு துண்டெடுத்துக்கொண்டு, அறையோடு இணைந்த குளியலறைக்குள் சென்றான்.

பிளாஸ்டிக் வாளியில் தண்ணீர் பிடித்தான். நிர்வாணமாக நின்று தண்ணீர் எடுத்து தலையில் ஊற்றிக் கொண்டு குளித்தான்.

அறைக்குள் வந்து கையில் அகப்பட்ட ஒரு கறுப்பு காட்டன் டி ஷர்ட்டை எடுத்து உதறி கழுத்து வழியாக அணிந்தான். கட்டிலில் கிடந்த நிறம் தேய்ந்த நீல நிற ஜீன்ஸ் பேண்ட் அணிந்து, பெல்ட்டின் பக்கிள்ஸ் பொருத்தினான். இன்னும் கொஞ்சம் ஈரம் இருந்த தலையை ஒரு தரம் உலுக்கிக் கொண்டு சுவரில் மாட்டிய கண்ணாடி முன்பு நின்று சீப்பெடுத்தான். இரண்டு பல் முறிந்திருந்த அந்த சீப்பை ஒரு தரம் வெளிச்சத்திற்கு நேரமாகப் பிடித்துப் பார்த்தான்.

அதில் ஒரு ஒற்றைத் தலைமுடி நீளமாக சிக்கியிருந்தது. அதைத் தனியாக எடுத்து ஒரு முனையைப் பிடித்துக் கொண்டு, மறுமுனையை நேராக இழுத்துப் பார்த்தான். பதினெட்டு இஞ்ச்சுக்கும் மேலே இருந்தது.

"ஏன் சார், உங்களுக்கு வயசு என்ன?"



"ஏன்?"

"முப்பது இருக்காது?"

"முப்பத்தி இரண்டு."

"நல்ல உத்தியோகம் இருக்கு. பைக், டி.வி.ன்னு வசதியா இருக்கீங்க. கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே?"

"நீ ஒருத்திதான் பாக்கி. அட்வைஸ் வேணாம். வந்து வேலையைப் பாரு. போ! போய் சட்டுன்னு குளிச்சுட்டு வந்துடு. துண்டு வேணுமா?"

"நான் புறப்பட்டவே குளிச்சுட்டுத்தான் சார் வந்தேன்."

"இந்தக் கதையெல்லாம் வேணாம். இங்க குளி."

"குளிச்சா முகத்துக்கு மறுபடி மேக்கப் பண்ணிக்கணும் நான் எதுவும் எடுத்துட்டு வரலை சார்..."

"என்ன பெரிய மேக்கப்? சீப்பிருக்கு. பவுடர் இருக்கு. வேற என்ன வேணும்? சீக்கிரம். உன் பேரென்ன சொன்னே?"

"ஆனந்தவல்லி..."

அவன் அந்தத் தலைமுடியை ஜன்னல் வழியாகக் கையை நீட்டி வெளியே வீசிவிட்டு வந்து தலை சீவிக் கொண்டான் பஃப் வைத்து பவுடர் ஒற்றிக் கொண்டான்.

கழற்றிப் போட்ட பேண்ட்டில் இருந்து மணிபர்ஸ் எடுத்து இந்த பேண்ட்டில் வைத்துக் கொண்டான். பைக் சாக்ஸ் தேடி எடுத்து வந்து அணிந்தான் சாவியோடு ஹாலுக்கு வந்து ஷு அணிந்தான்.

டி.வி. மேலே வைத்திருந்த தீப்பெட்டி எடுத்து சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு, ஒரு தரம் டி.வி.யைப் போட்டான்.

"எங்க தங்கவேலு சார், பூச்சி விழுந்த இலைகளை செடியிலேர்ந்து கிள்ளி எடுத்துட்டதுக்கு அப்புறம்தான் மருந்து அடிக்கணும்னு சொன்னிங்க. பெரிய இலைகளை மட்டும் கிள்ளணுமா, இல்லை குருத்து இலைகளையும் கிள்ளிடணுமான்னு கொஞ்சம் சொன்னிங்கன்னா பரவால்லை."

"சின்ன இலை, பெரிய இலைன்னு இல்லைங்க. எந்தெந்த இலையில பூச்சி விழுந்திருக்குதோ, அந்த இலைகளை எல்லாம் கிள்ளி எடுத்துடணுங்க..."

"அப்போ பூச்சி விழுந்த எல்லா இலைகளையும் கிள்ளிடணும்னு சொல்றீங்களா?"

"ஆமாங்க. அப்பத்தாங்க செடிக்கு பாதுகாப்பு."

"சரிங்க. இந்தக் கிள்ளி எடுத்த இலைகளை என்னாங்க செய்யறது?"

அவன் டி.வி.யை சடக்கென்று அணைத்துவிட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு வாசலுக்கு வந்தான். சிகரெட் முடிந்த பிறகு புறப்படலாம் என்று பைக்கில் சாய்ந்து நின்றபடி புகைத்துக் கொண்டிருந்தான்.

"ஹலோ சார், இப்பத்தான் ஆபீஸ்லேர்ந்து வர்றிங்களா?" என்று அருகில் வந்தார் அதேத் தெருவில் குடியிருக்கும் ஜிப்பா போட்ட சுப்பிரமணி வீணை வித்வான். வாயில் வெற்றிலைக் குதப்பல்."

"முதல்லயே வந்துட்டேன். இப்ப வெளில புறப்பட்டுக்கிட்டிருக்கேன்."

"ஒண்ணுமில்லை. என் மச்சினி சௌந்தர்யான்னு பேரு. அஞ்சரை அடி உசரம். நல்லா செவப்பா இருப்பா. வேலை எதுவும் கிடைக்கலை. நான்தான் வீணை கத்து கொடுத்துக்குட்டிருக்கேன். டான்ஸ் வேற கத்துக்கறா. சினிமால அறிமுகப்படுத்தணும்னு ஆசை. நீங்க பெரிய அட்வர்டைஸ்மெண்ட் கம்பெனில போட்டோகிராஃபரா இருக்கறதால எந்த



மாதிரி லைட்டிங் பண்ணி எடுத்தா எடுப்பா, அழகா போட்டோ எடுக்கலாம்னு விவரம் தெரிஞ்சவர். கொஞ்சம் டைம் ஒதுக்கி அவளை ரெண்டு, மூணு ட்ரெஸ்ல போட்டோ எடுத்துக் கொடுத்திங்கன்னா, அந்த போட்டோவை ஆல்பம் பண்ணி காட்டி, சான்ஸ் கேக்கறதுக்கு சௌகரியமா இருக்கும்."

"எனக்கு நேரம் இருக்காது சார்."

"அதுக்கு உண்டான சார்ஜை நீங்க வாங்கிக்கலாம் சார். அதான் முறை."

"நான் அதுக்குச் சொல்லலை."

"ஞாயித்துக் கிழமை உங்களுக்கு லீவு தானே? அரை நாள் ஒதுக்கலாமே. எங்க வீடு சௌகரியம்னா எங்க வீட்ல எடுக்கலாம். இல்லை, உங்க வீட்டுக்கு அழைச்சுட்டு வரச்சொன்னாலும் சரி, மறுக்காதிங்க. உங்க கைராசி, அவ அமோகமா வரணும்."

"பார்க்கலாம் சார், நாளைக்குச் சொல்றேன்" முடிந்த சிகரெட்டை தூரமாகப் போட்டுவிட்டு, பைக்கில் அமர்ந்து கொண்டான்."

"இல்லை, நீங்க செஞ்சிக் கொடுப்பீங்க. எனக்குத் தெரியும். என்ன மாதிரி டிரெஸ், என்ன கலர் இருந்தா தேவலாம்னு சொன்னா, புதுசாக்கூட எடுத்து தெச்சிடுவேன்."

"பொண்ணைப் பார்க்காம டிரெஸ் கலர் எல்லாம் எப்படி சார் சொல்றது?"

"உங்களுக்கு ஒரு அஞ்சி நிமிஷம் இருக்குமா? போற வழில தானே என் வீடு? வீட்ல தான் சும்மா புக் படிச்சுட்டு இருக்கா. பார்த்துடுங்களேன்."

"சரி, வாங்க சார்" என்றான் எரிச்சலை அடக்கிக்கொண்டு.

சுப்பிரமணி பைக் பின்னால் அமர்ந்து கொண்டார்.

நாற்பதடி தூரத்தில் இருந்த அவர் வீட்டின் முன்னால் இறங்கிக் கொண்டு, வேட்டியை மடக்கிக் கட்டிக் கொண்டு வீட்டுக்குள் ஓடினார்.

அவன் பைக்கை சைடு ஸ்டாண்டில் நிறுத்திவிட்டு வீட்டுக்குள் வந்தான்.

"அப்புறம் சாப்பிடலாம். அப்படியே கையலம்பிட்டு எழுந்து வா" என்று சமையல்கட்டிலிருந்து அவர் குரல் கேட்டது. ஹாலுக்கு வந்து, "இதோ வர்றா. உட்காருங்க சார்" என்றார்.

" சாப்டாச்சு. இதோ...வா! வாம்மா, சௌந்தர்யா இவர்தான், நான் சொன்னேன்ல, உன்னை போட்டோ பிடிக்கப் போறவர்."

சௌந்தர்யா பாவாடை, தாவணியில் இருந்தாள். உயரம், சிவப்பு, இரட்டைப் பின்னல்கள், முகத்தில் தேவையில்லாமல் ஒரு சம்பிரம் இருந்தது. அடர்த்தியான புருவங்கள். தாவணி லேசாக விலகியிருந்ததைப் பற்றிக் கவலைப்படாமல், அதிர வந்து நின்று, "வணக்கம் சார்" என்றாள்.

மேக்கப் போட்டால் தேறிவிடுவாள் போலத்தான் இருந்தது. அவன் வணக்கம் சொல்லிவிட்டு உடனே எழுந்து கொண்டு, "சரிங்க, டிரெஸ் விவரம் நாளைக்குச் சொல்றேன். புறப்படறேன்" என்று அவரிடம் சொல்லிவிட்டு வாசலுக்கு வந்தான்.

அவர் வாசலுக்கு பின்னாலேயே வந்து விட்டார்.

"அந்தப் பொண்ணை பியூட்டி பார்லருக்கு அனுப்பி புருவத்தை ட்விஸ் பண்ணச் சொல்லுங்க. ஒரு தடவை ஃபேஷியல் ப்னிச்சிங் பண்ணிக்கச் சொல்லுங்க ஆமாம். உங்க வைஃப் எங்கே?"

"அவ இறந்து போய் நாலு வருஷமாச்சே."

"அப்படியா? வீட்ல வேற..."



"யாருமில்லை. சௌந்தர்யாவும், நானும்தான். ஒரு சினிமா ஸ்டாரானதும் தான் கல்யாணம்னு தீர்மானம்" என்று தரை பார்த்துச் சிரித்தார்.

"அப்படியா?" சரி, வர்றேன்"

"நீங்க எந்தப் பக்கம் போறீங்க?"

"ஏன்?"

"மௌண்ட் ரோடு போகணும். அந்தப் பக்கம்னா வழில இறங்கிக்கலாமேன்னுதான் கேட்டேன்."

"இல்லை. அடையாறு போறேன்."

"புறப்படுங்க. உங்க ஃப்ரெண்ட்ஸ் வெயிட் பண்ணிட்டிருக்கப் போறாங்க. ஃப்ரெண்டு வீட்டுக்குத் தானே?"

அவரைப் பார்த்து லேசாகச் சிரித்த அவன், "இல்லை, ஒரு பெண்ணை கொலை செய்யறதுக்காகப் போறேன்" என்பதை மனதிற்குள் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

ஒரே விவரத்தோடு இந்த அத்தியாயத்தை முடிக்கலாம். அவன், அவன் என்று குறிப்பிட்ட அவன் பெயர்: ஈஸ்வர்.

அறிவே மகிழ்ச்சி! அறிவே அணிகலன்!
அறிவே ஆற்றல்!
ஆத்மாவின் சிந்தனையே இலக்கியம்
பிரிவு காதலைக் கூர்மைப்படுத்துகிறது
- தாமஸ் கார்லைல்

# 2

## ஒரு ஃப்ளாஸ் பேக்
## (முன்பு நடந்தது)

"ஈஸ்வர்..."

"ம்?"

"கண்ணைத் திறந்து பார்த்தாதானே சொல்ல முடியும்?"

"கேக்கப் போறது என் காது. நான் கண்ணை மூடிட்டிருந்தா உனக்கென்ன? நீ பாட்டுக்கு சொல்லு பரணி."

"ச்சே! சில சமயம் நான் யோசிக்கிறேன்..."

"என்னன்னு?"

"ஒரு கிராக்குப் பையனைப் போய் எப்படி லவ் செஞ்சோம்னு?"

"ஏய்!"

"பின்னே என்ன, அவனவன் எப்படா நம்மாளைப் பார்ப்போம்னு தவமிருப்பான், நீங்க என்னடான்னா, மடியில படுத்துட்டு கண்ணை மூடிட்டா என்ன அர்த்தம்?"

"நான் கற்பனையில கண்ணுக்குள்ளே உன்னை என்னேன்னவோ பண்ணிட்டிருக்கேன்னு அர்த்தம்."

"அதென்ன கற்பனை?"

"மறைக்காம அப்படியேச் சொல்லட்டுமா பரணி?"

"ம்."



"அப்புறம் திட்டக்கூடாது."

"இல்லை."

"இந்த நிமிஷம் என் கற்பனையில இந்த பீச்சுல நீ ஓடிக்கிட்டிருக்கே கடலை நோக்கி."

"இதில திட்டறதுக்கு என்ன இருக்கு?"

"பாத்ரூம்ல குளிக்கிற போஸ்ல ஓடிட்டிருக்கே பரணி."

"ஏய்! கருமம்! ச்சீ! கண்ணைத் திறங்க! படவா! இப்படி அசிங்க அசிங்கமா கற்பனை பண்றதுக்குத்தான் என்னை வரச்சொன்னீங்களா?"

"பார்த்தியா, திட்டக் கூடாதுன்னு சொன்னேன்ல. அய்! மெகந்தி வெச்சிருக்கே! பியூட்டி ஃபுல். உன் கைக்கு எவ்வளவு ஜோரா இருக்குத் தெரியுமா?"

"பேச்சை மாத்த வேணாம். நேத்து ஏன் போன் செய்யலை?"

"வேலைல கொஞ்சம் பிஸி."

"என்ன பிஸி?"

"வேறென்ன, ஒரு மாடல் கேர்ளை சோப்பு விளம்பரத்துக்காக போட்டோ எடுத்துட்டிருந்தேன்."

"அவ பிரா, ஜட்டியோட நின்னாளாக்கும். அதைப் பார்த்து ஜொள்ளு விட்டிங்களாக்கும்."

" அது கூட இல்லை பரணி. ஒரு நீளமான டவல் மட்டும்தான். ஷவர்லேர்ந்து தண்ணி கொட்டும். இவ தலை பூரா சோப்பு நுரை. கை தூக்கி, கண்மூடி தலையைக் கோதற ஷாட்! ஒரு ரோல் முழுக்க எடுத்தும் திருப்தி இல்லை நாளைக்கு மறுபடி எடுக்கணும்."

"ஏன், அவளை மறுபடி அந்த கோலத்துல பார்க்கணுமா?"

"சே! தொழில் முறையா இருக்கும் பரணி. பதினைஞ்சு பேருக்கு முன்னாடி, லைட்ஸ் எல்லாம் போட்டு வெச்சு, போகஸ் சரியா இருக்கா, லைட்டிங் சரியா இருக்கா, போஸ் சரியா இருக்கான்னு தான் கவனிக்கத் தோணும்."

"அ! கௌதம புத்தர்! நெஞ்சல கை வெச்சு சொல்லுங்க, அப்ப சலனப்படவே மாட்டிங்களா?"

"கொஞ்சுண்டு இருக்கும் பரணி. அதுதான் மனுஷன்னு அடையாளம் காட்ற சங்கதி. தொழில் சிரத்தைதான் தொண்ணூத்தி அஞ்சு பெர்ஸண்ட் இருக்கும். இந்த சலனம் எல்லோருக்கும் பொது. போன வாரம் சினிமா பார்த்துட்டிருந்தப்போ ஷாருக்கானைப் பார்த்து 'வாட் எ மேன்!'னு சொன்னியா இல்லையா?"

"ச்சீ! அது ஒரு ரசிகையா சொன்ன கமெண்ட்!"

"அந்த ரசனைக்குள்ளே அஞ்சி பர்செண்ட் சலனம் இருக்கு பரணி. நத்திங்ராங்க இது நேச்சுரல்னு புரிஞ்சுக்கிட்டு என்னோட சண்டை போடாம இருன்னுதான் சொல்றேன்."

"எதார்த்தம் உளறாதீங்க. நாங்க ஒண்ணும் உங்களை மாதிரி நாக்கைத் தொங்க போட்டுக்கிட்டு அலையறதில்லை."

"என்ன அலைஞ்சாங்க?"

"அன்னைக்கு உங்க ஆபீஸ் வந்தப்ப அந்த கேரளாக்காரி முந்தானை விலகியிருக்கிறதைக்கூட கவனிக்காமே கெக்கே பிக்கேன்னு சிரிக்கறா. நீங்களும் விழுந்து விழுந்து சிரிச்சிங்க. கேட்டதுக்கு என்னமோ ஜோக்குன்னு சொல்லி சமாளிச்சிங்க."

"சமாளிச்சேனா? நிஜமாவே நான் ஒரு ஜோக் சொன்னேன். அதுக்குதான் சிரிச்சிட்டிருந்தோம் பரணி."



"அதான் எதுக்குன்னு கேக்கறேன். எதுக்காக அவகிட்ட நீங்க ஜோக் சொல்லணும்?"

"ஒரு ஃப்ரெண்ட் அவ. கூட வொர்க் பண்றா. சகஜமாப் பேசுவோம். சகஜமா ஜோக் சொன்னேன்."

"ஒரு ஃப்ரெண்கிட்டே பலான ஜோக் எதுக்கு?"

"பலான ஜோக் அவகிட்டே சொன்னேன்னு உனக்குத் தெரியுமா?"

"வேறென்ன சொல்லியிருக்கப் போறீங்க?"

"டீஸண்ட்டான ஜோக்கே இல்லையா உலகத்தில. ஏன் உன் பார்வை இவ்வளவு குறுகலா இருக்கு? இதோ பாரு, அடிப்படையா உனக்கு என்மேல நம்பிக்கையே இல்லையா?"

"சபலத்தைப் பொறுத்துவரைக்கும் எல்லா ஆம்பளைங்களும் ஒரே மாதிரி தான் ஈஸ்வர்."

"அநாவசியமா நீ வம்பு இழுக்கறே. நீயா பேத்தலா ஒரு முடிவுக்கு வந்துட்டா சரியாப் போச்சா? முதல்ல இந்த சந்தேகத்தைவிடு. காதல்ல சந்தேகம் மட்டும் வரவே கூடாது."

"அது நீங்க நடந்துக்கற விதத்தைப் பொறுத்தது."

"நான் ராமன் மாதிரி, என் இதயத்தைக் கிழிச்சுப் பார்த்தா உள்ளே நீ மட்டும் தான் இருப்பே'ன்னு என்னால நாடகத்தனமா டயலாக் சொல்ல முடியாது பரணி.

"பட், ஐ லவ் யு அண்ட் யு ஒன்லி!"

"வாயால சொல்றது மனசுலயும் பதிஞ்சிருந்தா சரிதான்."

"பார்த்தியா, மறுபடி சந்தேகம்!"

"கையை எடுங்க."

"அதான் இருட்டிடுச்சே."

# 3

ஸ்டார் டி.வி.யில் வைரம் கண்டுபிடிக்கும் நிகழ்ச்சியை படுக்கையில் படுத்து, கால்களை அசைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள் திவ்யா.

திவ்யா இரவு உடையில் இருந்தாள். கூந்தலை லூஸாக அலைய விட்டிருந்தாள். தங்கச் செயினில் தாலியைக் கோர்த்திருந்தாள். முகம் அத்தனை அழகென்று சொல்ல முடியாது. ஆனால் கச்சிதமான உடலமைப்பும், நாகரீக ஒப்பனையும் அவளிடம் கவர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

திவ்யாவுக்கு அந்த நிகழ்ச்சி போரடித்தது. எழுந்து சென்று டி.வி.யை அணைத்துவிட்டு புத்தகம் எடுத்துக் கொண்டு வந்து கட்டிலில் அமர்ந்தாள். முதுகுக்கு இரண்டு தலையணைகள் கொடுத்து சாய்ந்து புத்தகத்தைப் புரட்டினாள்.

வானத்தில் நட்சத்திரப் புள்ளிகளைத் தவிர, மற்றபடி தார் டின்னைக் கவிழ்த்தது போல கறுப்பு. பகலின் உஷ்ணத்திற்கு நஷ்ட ஈடாக கடலில் குளித்து வந்த ஈரமான காற்று கடற்கரைக்கு வந்தவர்களை கிச்சு கிச்சு செய்து கொண்டிருந்தது.

டெலிபோன் ஒலித்தது. புத்தகத்தைக் கவிழ்த்து வைத்துவிட்டு நகர்ந்தமர்ந்து எடுத்து, "ஹலோ" என்றாள்.

"ஹாய் திவ்யா!"

"என்னங்க, எப்படி இருக்கிங்க?" என்றாள் முகமலர்ச்சியுடன்.



"ஃபைன். நீ எப்படி இருக்கே?"

"நல்லாதான் இருக்கேன். நேத்து போன் செய்றேன்னு சொன்னீங்களே, ஏன் செய்யலை?"

"கொஞ்சம் வேலையாப் போயிடுச்சு திவ்யா."

"ராத்திரி பத்தரை மணிக்கு நான் ஹோட்டலுக்குப் போன் செஞ்சேன். நீங்க இன்னும் திரும்பலைன்னு சொன்னாங்க. பத்தரை மணி வரைக்கும் என்ன வேலை உங்களுக்கு?"

"திவ்யா, அந்தக் கம்பெனி மேனேஜர் எனக்கு பார்ட்டி கொடுத்தார்."

"தண்ணி பார்ட்டியா?"

"ஆமாம். அவாய்ட் பண்ண முடியலை திவ்யா. வேணாம்னா அவன் விடறதா இல்லை. நான் குடிச்சா என் பொண்டாட்டிக்குப் பிடிக்காதுய்யான்னு கூட சொல்லிப் பார்த்தேன். விடலை ரொம்ப வற்புறுத்தினான், சரின்னு..."

"எத்தனை மணிக்கு ரூமுக்குத் திரும்பி வந்திங்க?"

"ஒரு மணி ஆயிடுச்சி."

"நீங்களா வந்திங்களா, இல்லே ரெண்டு பேர் தூக்கிட்டு வந்து படுக்க வெச்சாங்களா?"

"பார்த்தியா, வார்றியே... ஜஸ்ட் ட்டு பெக்ஸ் திவ்யா."

"எத்தனை மணிக்கு பார்ட்டி ஆரம்பிச்சது?"

"ஒம்போது மணிக்கு."

"ஒரு மணி வரைக்கும் ரெண்டே ரெண்டு பெக்தான் குடிச்சிங்களா?"

"நேர்ல கேட்டா உன் தலைல அடிச்சு சத்தியம் செய்யலாம். இப்ப டெலிபோன்ல அடிச்சுதான் சத்தியம் செய்யணும்."

"பார்ட்டி எங்கே?"

"அவர் வீட்லயே."

"வீட்லயேவா?"

"ஆமாம். இதெல்லாம் அவர் ஃபேமிலிக்கு ரொம்ப சகஜம் திவ்யா இன்ஃபாக்ட் அவர் வொய்ஃப் கூட பார்ட்டில கலந்துக்கிட்டாங்க. அவரோட பொண்ணு சர்வ் செஞ்சா."

"சரிதான். பின்னே ஏன் அவ்வளவு நேரமாகாது? அந்தப் பொண்ணும் தண்ணியடிச்சாளா?"

"ஒன்லி பியர்."

"ஒரு ரவுண்டுக்கப்புறம் அவ மியூசிக் போட்டுட்டு டான்ஸ் ஆடியிருக்கணுமே..."

"நேர்ல பார்த்த மாதிரி எப்படி கரெக்ட்டா சொல்றே?"

"அவனோட நீங்களும் சேர்ந்து டான்ஸ் ஆடினீங்களா?"

"ச்சீ! நோ!

"பொய் சொல்றீங்க. நீங்க கை கோர்த்து, கட்டிப் பிடிச்சிருப்பீங்க."

"ஏய்! இல்லைன்னு சொன்னா கேட்டுக்கணும்."

"உங்ககிட்டேர்ந்து ஆர்டர் வாங்கறதுக்காக

உன்னால் அணைக்க முடிந்த நெருப்பை மட்டுமே நீ உண்டாக்க வேண்டும்.

பணம் எதையும் செய்யும் எதைச் செய்யக் கூடாதோ அதையும் செய்யும்.

-ஹிமாலயன்



அந்த மேனேஜர் எதுவேணாலும் செஞ்சிருப்பான். எனக்குத் தெரியும். அந்தப் பொண்ணோட டான்ஸ் ஆடிட்டு அப்படியே ரூமுக்குள்ளே அழைச்சிட்டுப் போயிருப்பிங்க. அதான் லேட்டு!"

"திவ்யா! திஸ் ஈஸ் டூ மச்! யார்கிட்ட பேசறோம், என்ன பேசறோம்னு யோசிச்சுதான் பேசறியா? நினைச்சிருந்தா நாம் பார்ட்டிக்குப் போனதையே மறைச்சு சினிமா போயிருந்ததா சொல்லியிருக்க முடியாத? எதையும் மறைக்காம சொல்லிடலாம்னு பார்த்தா, ரொம்ப ஓவராப் பேசிறயே. நான் அந்த டைப் இல்லை. கல்யாணமாகி ரெண்டு வருஷமாகியும் இன்னும் என்னைப் புரிஞ்சுக்கலையா நீ?"

திவ்யா எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தாள்.

"ஓக்கே, சரி, அதை விடு. நாளைக்குக் காலை ஃபிளைட்ல புறப்பட்டு வர்றேன். ஏர்போர்ட்டுக்கு வண்டி அனுப்பிடு சரியா?"

"ம்..."

"வீட்ல துணைக்கு வேலைக்காரியை படுத்துக்கச் சொல்லியிருக்கியா?"

"இல்லை, எனக்கெதுவும் பயம் இல்லை."

"பயத்துக்காக இல்லை, ஏதாச்சும் திடீர்னு உதவி தேவைப்படலாம்னுதான் சொன்னேன். சரி, பரவால்லை, அங்கே வேற எதுவும் விஷயமில்லையே?"

"இல்லைங்க, கோபமா?"

"கண்டபடி கேட்டா கோபம் வராதா?"

"மன்னிச்சிடுங்க."

"பரவால்லை விடு. நீ ரொம்ப பொஸஸிவ்! அதனாலதான் சமயத்தில ரொம்பவும்

சென்சிடிவாய்டறே. நிம்மதியா தூங்கு. காலைல பார்க்கலாம். குட் நைட்."

"குட் நைட்" என்று வைத்தாள் திவ்யா. கொஞ்ச நேரம் அமைதியாக அமர்ந்திருந்தாள். மீண்டும் புத்தகத்தை எடுத்துக்கொண்ட போது, அழைப்பு மணி ஒலித்தது.

அவள் பார்வை முதலில் சுவர் கெடிகாரத்திற்குச் சென்றது. மணி 'எட்டு, நாற்பத்தி ஐந்து' என்று காட்டியது. இவள் மாடியிலிருந்து இறங்கி வந்து கதவை நெருங்குவதற்குள் மறுபடி மணி ஒலித்தது.

பீப் ஹோலில் கண் பொருத்திப் பார்த்து திடுக்கிட்டாள்.

சுந்தர் நின்று கொண்டிருந்தான்.

' இவன் எங்கே வந்தான்?'

திவ்யா கதவைத் திறந்துப் பிடித்து புதிதாக ஒரு முறை ஆச்சரியப்பட்டு, "நீங்களா?" என்றாள்.

"சௌக்கியமா திவ்யா? நல்ல வேளை. என்னை ஞாபகம் வெச்சிருக்கே." என்ற சுந்தர் ஜீன்ஸ் பேண்ட்டும், காட்டன் முழுக்கை சட்டையும் அணிந்திருந்தான். கன்னத்தில் அடர்த்தியாக தாடி.

"கொஞ்சம் பேசணும், உள்ளே வரலாமா?"

தயக்கத்துடன் விலகி வழி விட்டாள்.

சுந்தர் உள்ளே வந்து, "உட்காரட்டுமா?" என்று கேட்டு உட்கார்ந்து கொண்டு, "நீயும் உட்காரு திவ்யா" என்றான்.

திவ்யா எதிரில் வந்து குழப்பத்தோடு அமர்ந்தாள்.

'எங்கே அவரு? உன் ஹஸ்பண்ட்? எனக்கு அறிமுகப்படுத்தி வைக்க மாட்டியா?"

"சுந்தர், அவர் ஊர்ல இல்லை. என்ன



விஷயமா என்னை இத்தனை நாள் கழிச்சு பார்க்க வந்திருக்கிங்க?" என்றாள்.

"திவ்யா, என்னை சீப்பா நினைச்சிட வேணாம். உன் ஹஸ்பண்ட்டைப் பார்த்து, நான் திவ்யாவோட பழைய காதலன்னு சொல்லி உன் குடும்பத்துல குழப்பம் உருவாக்கறதுக்காக நான் வரலை."

"அது நோக்கமா இருந்தாக் கூட நிறைவேறாது சுந்தர். ஏன்னா, நம்ம காதல் விஷயத்தையும், நான் உங்களை நிராகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதையும் என் ஹஸ்பண்ட்கிட்ட நான் மனம் விட்டு பேசியிருக்கேன்."

"வெரிகுட் நான் இப்போ ஒரு கம்பெனில ரெண்டாயிரம் ரூபா சம்பளத்தில வேலை பார்க்கறேன் திவ்யா. வெல் செட்டில்ட். ஆனா, எனக்கு வேற ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு மனசு வரலை."

"அதுக்காக?" என்று அவன் முகத்தைப் பார்த்தாள்."

"குழம்பாதே! நான் என் நிலைமையைச் சொல்லிப் புலம்பறதுக்காக வரலை. திவ்யா, உன்னோட பழகினதால எனக்கு ஒரே ஒரு லாபம்! இதோ பாரு!" சுந்தர் தன் கைப்பையின் ஜிப்பை இழுத்துத் திறந்து, உள்ளிருந்து ஒரு புத்தகம் எடுத்தான். அவளிடம் தந்தாள்.

அதில் 'ஓடையின் ஓரத்தில்...' என்று தலைப்பும், சுந்தரின் பெயரும் இருந்தது.

ஒருவன் : "கற்றது கைமண் அளவு"

மற்றவன் : "கல்லாதது?"

ஒருவன் : "களிமண் அளவு"

"என்ன பார்க்கறே? நான் எழுதிய கவிதைகள் புத்தகமா வந்திருக்கு. அது மட்டுமில்லை, இந்தப் புத்தகம் தமிழ்நாடு அரசோட பரிசையும் எனக்கு வாங்கிக் கொடுத்திருக்கு. இந்தப் புத்தகம் எழுதக் காரணமா இருந்தவ நீ! உன்னோட நினைவுகள்! நீ எனக்குத் தந்த அனுபவங்கள்! இதெல்லாம்தான் இதில கவிதைகளா மாறியிருக்கு. இந்தப் புத்தகத்தை உனக்குக் கொடுத்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்."

திவ்யாவுக்கு சற்று ஆறுதலாக இருந்தது.

"நான் புறப்படறேன் திவ்யா. உன்னை ஒண்ணே ஒண்ணு கேக்கலாமா?"

"என்ன?"

"நீ சந்தோஷமா இருக்கியா?"

"ரொம்ப சந்தோஷமா இருக்கேன். அப்போ, கிளம்பறீங்களா?"

"சரி" என்று எழுந்து கொண்டான். நடந்தான். வாசலைத் தாண்டியவன் நின்று அவளை ஒரு தரம் பார்த்தான்.

"குட் நைட்" என்று அவசரமாகக் கதவைச் சார்த்தினாள். மாடிப்படிகளை நோக்கி நடந்தாள்.

மீண்டும் அழைப்பு மணி ஒலித்தது. வேகமாக வந்து கதவைத் திறந்து, "இன்னும் என்ன சொல்லணும்?" என்று படபடத்தவள் எதிரே நிற்பவன் சுந்தர் இல்லை என்பதை உணர்ந்து தடுமாறினாள். "நீங்க... நான்... வேற ஒருத்தரை நினைச்சு... உங்களுக்கு என்ன வேணும்?"

"விஸ்வம் இருக்காரா? நான் அவரோட ஃப்ரெண்டு" என்றான் ஈஸ்வர்."

"அவர் ஊர்ல இல்லையே. நாளைக்குக்



காலைதான் வருவார்."

"அப்படியா? சரி, ஒரு விவரம் கேட்டிருந்தார். கொண்டாந்திருக்கேன். அவர்கிட்ட கொடுத்துடறீங்களா?"

"சரி, கொடுங்க."

ஈஸ்வர் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து மணி பர்ஸ் எடுத்து, அதற்குள் எதையோத் தேடுபவன் போல பாவனை செய்து, உள்ளே வெளிச்சத்தில் பார்க்க முற்படுபவன் போல இயல்பாக வீட்டுக்குள் வந்து தேடினான்.

அப்போதுதான் திவ்யா அவன் கைகளில் கிளவுஸ் அணிந்திருப்பதைப் கவனித்தாள். மணிபர்சுக்குள்ளிருந்து ஒரு கருட்டப்பட்டக் கம்பியை எடுப்பதைப் பார்த்து, அதை எதற்கு எடுக்கிறான் என்று அவள் யோசிக்கும் முன்பாக...

ஈஸ்வர் அவளருகில் வந்து அந்தக் கம்பியை அவள் கழுத்தில் சுற்றி, அவளைக் கொஞ்சமும் கத்துவதற்கு அனுமதிக்காமல் இரண்டு பக்கமும் பிடித்து இழுத்தான்.

திவ்யா எதிர்பாராத இந்தத் தாக்குதலில் நிலை குலைந்து போய், மூச்சு விடத்துடித்தாள். கண்கள் பெரிதாகின. கம்பி கழுத்தை அறுக்கத் துவங்கி ரத்தம் வழியத் துவங்கியது. வாயிலிருந்தும் ரத்தம் வர... அவளுடைய சத்தமில்லாத எதிப்புப் போராட்டம்

கம்பௌண்டர் - 1 : "நம்ம டாக்டர் பட்டு வேட்டி சட்டையுடன் கழுத்தில் செயினுடன் எங்கே போறார்?"

கம்பௌண்டர் - 2 : "பேஷண்டுக்கு 'மைனர்' ஆபரேஷன் பண்ணப் போறாராம்."

ஒரு நிமிடத்திற்குள்ளேயே முடிந்து போனது.

அவளைத் தரையில் கிடத்திவிட்டு, கம்பியை அவள் கழுத்திலிருந்து விடுவித்த ஈஸ்வர் நடந்து ஹாலின் ஓரத்தில் இருந்த வாஷ்பேஷினை அடைந்தான். கம்பியில் படிந்திருந்த ரத்தத்தைக் கழுவினான். கம்பினை முன்போலக் சுருட்டினான், மணிபர்சுக்குள் வைத்துக் கொண்டான்.

அவளைத் தாண்டி வாசலுக்கு நடக்கும் போது, ஒரு விநாடி நின்று திறந்து விரைத்துப் போயிருந்த திவ்யாவின் விழிகளைப் பார்த்தான். கடந்து நடந்தான். வாசல் கதவை இழுத்து மூடிவிட்டு தெருவில் நடந்தான். தெருமுனையில் நிறுத்தியிருந்த தன் பைக்கில் அமர்ந்து, ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்ட பிறகு புறப்பட்டான்.

அவள் பெயர் என்ன சொன்னார் வித்வான்?

சௌந்தர்யா!

விசாரிக்க வேண்டும். யாரையாவது காதலிக்கிறாளா என்று விசாரிக்க வேண்டும், அதற்கப்புறம் இன்னொரு கேள்விக் கேட்க வேண்டும்.

சௌந்தர்யா கொஞ்சம் இடுப்புச் சதையைக் குறைத்தால் நல்லது.

சிகரெட் பிடித்தபடி பைக்கை ஓட்டிக் கொண்டிருந்தான் ஈஸ்வர்.

**திருடன் :** "வக்கில் சார், என்னை திருட்டு வழக்கிலிருந்து காப்பாற்றியதுக்கு நன்றி! அப்புறம் வந்து உங்களைப் பார்க்கிறேன்."

**வக்கீல் :** "பகலில் மட்டும் வா. ராத்திரில வராதே!"



# 4

## மீண்டும் ஒரு ஃப்ளாஸ் பேக்'

"ஈஸ்வர்."

"ஹாய் பரணி. வாட் எ சர்ப்ரைஸ். வா, உள்ளே வா! இதென்ன காலங்கார்த்தால இப்படி ஒரு திடீர் விஜயம்?"

"ஏன் வரக்கூடாதா?"

"அதுக்கில்லை. நீ வரப்போறேன்னு முன்கூட்டியே தெரிஞ்சா, இந்த ரூமை இன்னும் கொஞ்சம் சுத்தமா வெச்சிருப்பேன். பாரு, உன்னை உட்கார வைக்கிறதுக்குக் கூட திணற வேண்டியிருக்கு. இப்படி உட்காரு."

"ஈஸ்வர், ஒரு பேச்சிலர்ஸ் ரூம்னா அதைக் கந்தர்கோலமாத்தான் வெச்சிருக்கணும்னு ஏதாச்சும் ரூல்ஸ் இருக்கா? அது சரி. இதென்ன புக்?"

"ஏய்! கொண்டா அதை! அதெல்லாம் நீ பார்க்காதே!"

"இல்லை. பார்ப்பேன். என்ன புக் இது?"

"சரி. பாரு!"

"ச்சீ! கருமம்! என்ன ஈஸ்வர், இந்த மாதிரி புக்ஸ் எல்லாம் வெச்சிருக்கே நீ? மோசம்ப்பா."

"கலைக்கண்ணோட பார்த்தா கலைதான் தெரியும் பரணி."

"இதை ஒண்ணு சொல்லிடுவீங்களே..."

"ஆக்ச்சுவலா இந்த மாதிரி நியூஸ் போட்டோஸ் உள்ள புக் வாங்கிப் பார்க்கறது. இதில் உள்ள சில

போஸ்கக்காக. சில படங்கள்ல லைட்டிங் பிரமாதமா இருக்கும். அந்தப் புக்கை குடேன். அதில ஒரு படம் காட்டறேன் பாரு..."

"ஒண்ணும் வேணாம். பேசாம இருங்க. இன்னும் குளிக்கலையா?"

"இல்லை"

"ஏன்?"

"இன்னைக்கு ஆபீஸ் போறதா இல்லை. நேத்து ஒரு அசைன்மெண்ட் முடிக்க ராத்திரி மூணு மணியாயிடுச்சு. அதனால இன்னிக்கு லீவுன்னு சொல்லிட்டு வந்துட்டேன்."

"நல்லதாப் போச்சு. ஒரு ஐடியா பண்ணலாமா?"

"என்ன?"

"எங்கயாச்சும் அவுட்டிங் போலாமன்னு கூப்புடத்தான் வந்தேன். இங்க வந்ததும் வேற ஒரு ஐடியா வந்துருச்சு. நம்ம இல்லறத்துக்கு ஒரு நாள் ஒத்திகையா இன்னிக்கு வெச்சுக்கிட்டா எப்படி?"

"வாட் டு யு மீன்?"

"நீங்கதான் புருஷனாம், நான்தான் பொண்டாட்டியாம். உங்களுக்கு குளிக்கிறதுக்கு ஏற்பாடு செய்வேனாம். டிபன் செஞ்சித் தருவேனாம். அப்புறம் கடைக்குப் போய் ரெண்டு பேருமா செலக்ட் பண்ணி காய்கறி வாங்கிட்டு வர்றோமாம். நான் சமையல் செய்றேனாம். நீங்க சகிச்சுக்கிட்டு சாப்பிடறிங்களாம். அப்புறம் ரெண்டு பேரும் செஸ் விளையாடறோமாம். எப்படி ஐடியா?"

"எல்லாம் சரி, உன் ஒத்திகையில முக்கியமான ஒண்ணு குறையுதே."

"என்ன அது?"

"புருஷன் இருந்தாப்ல இருந்து பொண்டாட்டியை



உத்துப் பார்ப்பானாம். 'என்னங்க இப்படி பார்க்கறிங்க?' ன்னு அவ நெளிவாளாம். 'இன்னைக்கு நீ ரொம்ப அழகா இருக்கே தெரியுமா?' ன்னு சொல்லி அப்படியேத் தூக்கிட்டு வந்து கட்டில்ல போட்டு மேட்னி ஷோ ஆரம்பிப்பானாம்."

"ஏ...ய்!"

"புருஷன் - பொண்டாட்டின்னா இதுவும்தான் இருக்கும். ஒரு ஒத்திகை பார்க்கறதுன்னா சரியா முழுசா பார்த்துட வேணாமா? நாளைக்கு சாந்தி முகூர்த்த சமயத்தில் திருதிருன்னு முழிச்சிட்டுருக்க வேண்டியதில்லை பாரு."

"ஈஸ்வர், போதும். இது மட்டும் கிடையாது. மத்ததெல்லாம் உண்டு. கமான், எந்திரிச்சி குளிக்கப் போங்க. வெந்நீரா, பச்சை தண்ணியா?"

"பச்சை தண்ணிதான். முதுகு தேய்ச்சி விடுவே தானே?"

"அலையாதேய்யா, சமர்த்தா குளிச்சிட்டு வா, உன்னோட சமையல்கட்டுல டிபன் செய்யற மாதிரி என்ன வெச்சிருக்கிங்கன்னு பார்க்கறேன். என்ன ஈஸ்வர், என்ன அப்படிப் பார்க்கறிங்க?"

"பரணி, இன்னிக்கு நீ எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா?"

"நோ! நம்ம ஒத்திகையில அந்த சீன் கிடையாதுன்னு சொன்னேனா இல்லையா? அதுவும் குளிக்கக்கூட செய்யாம..."

"குளிச்சிட்டு வந்தா ஓகேயா?"

"பார்க்கலாம். ஒரு லிமிட் வெச்சுதான் அலோ பண்ணுவேன் மை டியர் செல்ல ராஸ்கல்!"

"போதுமே, இது போதுமே. ஒண்ணுலேர்ந்து பத்து எண்ணு. குளிச்சிட்டு வந்துடறேன்."

# 5

இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன் கிளாஸை அசைத்து அசைத்து டீ குடித்து முடித்ததும், தீப்பெட்டி எடுத்து அதிலிருந்து ஒரு குச்சி எடுத்துத் திருப்பி நன்றாக சாய்ந்து அமர்ந்து கொண்டு காதுக்குள் நுழைத்து நோண்டத் துவங்கியவாறு, "அப்புறம்?" என்றார்.

எதிரே நின்று கொண்டிருந்த அந்த வயதான பெரியவர் பணிவாகக் குனிந்து, "வீட்ல பூந்து தூங்கிட்டிருந்த என் பையனை மூணு பேரா சேர்ந்து உதை உதைன்னு உதைச்சிட்டுப் போயிட்டானுங்க. நான் பையனை ரிக்ஷால தூக்கிப் போட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டாந்தேன். ரெண்டு எடத்துல எலும்பு முறிஞ்சு போச்சதுங்க. கட்டுப் போட்ருக்காங்க. இன்னும் மயக்கம் தெளியலைங்க. அய்யாதான் கம்ப்ளைண்டை எடுத்துக்கிட்டு அந்தப் பசங்களைப் பிடிச்சி உள்ளேப் போடணுங்க. வைத்தியச் செலவுக்கு ஏற்பாடு செய்யணுங்க. நான் தினக்கூலிக்காரங்க. ஆயிரக் கணக்குல செலவாகுமுங்க. என்னால தாங்க முடியாதுங்க" அவர் அழத்துவங்கினார்.

"யோவ்! ஒப்பாரி வைக்கிறதெல்லாம் உன் வீட்டோட வெச்சுக்கணும். இது ஸ்டேஷன். நான் கான்ஸ்டெபிளை விட்டு விசாரிக்க வெச்சிட்டேன். உன் பையன் அவங்க வீட்டுப் பொண்ணைக் கட்டிப் பிடிச்சி கிஸ் அடிச்சிருக்கான்யா. அதுவும் பள்ளிக்கூடத்துக்குப் போற வழியில. நடு ரோட்ல.



இப்படி செஞ்சா வீட்டுக்கு வந்து உதைக்காம, பாக்கு வெத்தலை மாத்தி பரிசமாப் போடலாங்க? ம்?"

"அய்யா, நம்பாதிங்க! அவனுங்க அப்படியே ஒரு கதையை செட்டப் செஞ்சி சொல்லிருக்கானுங்க. என் பையன் அப்படிப்பட்டவன் இல்லைங்க. வீட்டு வாசல்ல தன் கட்சித்தலைவரோட படத்தை ஒட்டினாங்க. அவ்வளவுதாங்க இவன் செஞ்சது. தெருவுல இருக்கிற அந்த எதிர்கட்சிக்காரப் பசங்க, 'அந்தப் படத்தை கிழிடா, எங்க தலைவர் படத்தை ஒட்டுன்னு தகராறு செஞ்சிருக்காங்க. இவன் முடியாதுன்னிருக்கான். அதுக்காகத்தான் வீடு புகுந்து என் பையனை அடிச்சிப்போட்டுட்டு தலைவர் படத்தையும் கிழிச்சுப் போட்டுட்டுப் போய்ட்டாங்க. வேணும்னா வந்து பாருங்க. பாதி கிழிஞ்ச படம் சுவத்தில அப்படியே இருக்கும்."

இன்ஸ்பெக்டர் காது குடைவதை நிறுத்தாமல், "பெரியவரே, அவங்க என்ன சொல்றாங்கன்னா இந்த மாதிரி புகார் கொடுத்து காசு வாங்குறதுக்காக நீயே அந்தப் படத்தைக் கிழிச்சு விட்டுட்டதாச் சொல்றாங்க."

"அய்யோ! இது அபாண்டங்க, சத்தியமா இல்லை சார்."

"அவனுங்க படத்தைக் கிழிச்சதை யார் பார்த்தது?"

"நான் பார்த்தேங்க."

"நீ பாதிக்கப்பட்டவனுக்கு அப்பாய்யா. நீ பார்க்கலைன்னாலும் பார்த்ததாத் தான் சொல்வே. வேற யார் பார்த்தது?"

"வேற யாரும் பார்க்கலைங்கய்யா..."

"ஆனா, உன் பையன் அவங்க வீட்டுப் பொண்ணைக் கட்டிப் பிடிச்சதை நாலு பேர்

பார்த்திருக்காங்களே. சாட்சி சொல்றதுக்கும் தயாரா இருக்காங்களே. பொண்ணுக்கு நாளைக்கு கல்யாணம் ஆகணும் இல்லையா? பேர் கெட்டுப் போயிடப் போதுன்னுதான் புகார் கொடுக்க விரும்பலை. இப்ப அந்தப் பொண்ணு மட்டும் கையெழுத்துப் போட்டு ஒரு புகார் கொடுத்திச்சின்னு வெச்சுக்க, கற்பழிக்க முயற்சின்னு சொல்லி நான் உன் பையனை கைது செஞ்சி உள்ளாற வெச்சு கேஸ் போடலாம். அதனால இந்தா உன்னோட புகாரை இன்னும் நான் ஃபைல் செய்யலை. வாங்கிட்டுப் போய் கிழிச்சுப் போட்டுடு. உன் புகாரை என்ட்ரி போட்டா, அவங்களும் புகார் கொடுக்கத் தயாரா இருக்காங்க. அது உனக்குத்தான் பாதிப்பு. சமாதானமாப் போயிடுய்யா பேசாம இந்தா."

பெரியவர் தன் விம்மலை அடக்கிக் கொண்டு சில விநாடிகள் அவரையேப் பார்த்துவிட்டு அந்தப் புகாரைக் கையில் வாங்கிக் கொண்டு தளர்வாக நடந்து வெளியேறியதும்...

தன் நாற்காலியைப் பின்னால் தள்ளி எழுந்தார் சப்-இன்ஸ்பெக்டர் தயாளன். நேராக இன்ஸ்பெக்டரிடம் வந்தார். குரலைக் குறைத்துப் பேசினார்.

"சார், இது கொஞ்சம் கூட நியாயமில்லை சார்."

"என்ன நியாயமில்லை?"

"அந்தப் பார்ட்டி நேத்து வந்து உங்களைப் பார்த்துப் பேசனது, பேண்ட்லேர்ந்து கவர் எடுத்துக் கொடுத்தது. நீங்க வாங்கி வெச்சிக்கிட்டது எல்லாத்தையும் நான் பார்த்துக்கிட்டுதான் இருந்தேன். ஓரளவுக்காவது மனசாட்சிப்படி நடக்கணும் சார். தினக்கூலிக்காரன்னு சொன்னார். அவர் வயசைப் பார்த்திங்களா? நிலமையைப் பார்த்திங்களா? அநாவசியமா வந்து தகராறு செஞ்சி



அடிச்சிப் போட்டுட்டுப் போனவங்களை கண்டிச்சி செலவு பூராவையும் ஏத்துக்கச் சொல்றது தான் சரியான நியாயமா இருக்கும். அதைவிட்டுட்டு, இப்படி அவரைத் திருப்பியனுப்பிட்டிங்களே..."

தீக்குச்சியைக் குப்பைக் கூடையில் வீசிய புருஷோத்தமன், "பேசி முடிச்சாச்சா?" என்றார் எரிச்சலாக.

"என் மனசில பட்டதைச் சொன்னேன்."

"அது தப்பில்லை, யார்கிட்ட சொல்றோம்னுதான் புரியலை, தயாளன். நான் இங்கே இன்ஸ்பெக்டர், உங்களுக்கு சீனியர். அது ஞாபகம் இருக்கட்டும். எதை எப்படி நடத்தணும்னு எனக்குத் தெரியும். எனக்கு நியாயம் சொல்ற அதிகப்பிரசங்கித்தனம் எல்லாம் வேணாம். நேத்து அந்தப் பார்ட்டி வந்தப்ப அவங்களோட அட்ரஸ் கேட்டேன். விசிட்டிங் கார்டு கொடுத்தாங்க. வாங்கி வெச்சிக்கிட்டேன். அதைப் போய் கவர் வாங்கினதா சொல்றிங்களே? விட்டா விஜிலன்சுக்குத் தகவல் தருவீங்க போலிருக்கே உங்க வேலை எதுவோ, அதை மட்டும் பார்த்தா நல்லது. புரிஞ்சதா?" என்றார் அழுத்தமாக.

அவரின் பச்சைப் பொய்யையும், பொறுப்பில்லாத பதிலையும் ஜீரணித்துக் கொள்ள முடியாத அவர் வெறுப்போடு விலக... தொலைப்பேசி ஒலித்தது.

"தயாளன், எடுங்க" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஹலோ" என்றார் தயாளன்.

"போலீஸ் ஸ்டேஷனா சார்?" என்றது ஒரு பதட்டமான குரல்.

"ஆமாம், யாரு?"

"என் பேரு சீனிவாசன். இங்கே அடையாறுல கற்பகம் கார்டன்ஸ்ல நூத்தி எட்டாம் நம்பர் வீடு

என்னோடது. என் வீட்டுக்கு எதிர்ல மிஸ்டர் விஸ்வம்னு ஒருத்தர் இருக்கார். எனக்குப் பழக்கம். தினம் காலைல அவர் வீட்டுக்குப் போய் ஹிண்டு பேப்பர் பத்து நிமிஷம் புரட்டிட்டு வருவேன்."

"விஷயம் என்ன, அதைச் சொல்லுங்க சார்."

"இப்ப பேப்பர் படிக்க அவர் வீட்டுக்குப் போனேன். பெல்லடிச்சேன். பதிலில்லை. கதவு லேசா திறந்திருந்திச்சு. உள்ளே வந்துப் பார்த்தா... விஸ்வத்தோட மிஸஸ் திவ்யா செத்துக் கிடக்கறாங்க சார், வாயிலயும், கழுத்திலயும் ரத்தம். பார்த்தா கொலை மாதிரி தெரியுது..."

"உங்க பேர் என்ன?"

"அதான் சொன்னனே, சீனிவாசன், ரிடையர்ட் மேன். கலெக்டர் ஆபீஸ்ல ஹெட்கிளார்க்கா இருந்தேன். மூணு வருஷத்துக்கு முன்னாடி இப்படித்தான் மாயவரத்துக்கு நான் போயிருந்தப்போ..."

"நேர்ல வர்றோம் சார். அங்கேயே இருங்க" என்று வைத்த தயாளன் விவரங்களைச் சொன்னதும் புருஷோத்தமன் அலுப்போடு எழுந்து கொண்டார், "போச்சுடா! மர்டர்னாலே எனக்கு அலர்ஜி! ஏகப்பட்ட வேலை இழுத்துடும் சரி, வாங்க, போகலாம்" மேஜை மேலிருந்த தொப்பியை எடுத்து வைத்துக் கொண்டார்.

> அசைக்க முடியாத நம்பிக்கையைத்தான் உண்மையான விவேகம் என்கிறோம்.
>
> – நெப்போலியன்
>
> மனிதன் இயல்பாகவே ஓர் அரசியல் விலங்கு!
>
> – அரிஸ்டாட்டில்



# 6

# மறுபடியும் ஒரு 'ஃப்ளாஷ் பேக்'

"ஹலோ ஈஸ்வர் ஸ்பீக்கிங்."

"ஹலோ சார், என் பேரு ஜான்சி. ரொம்ப நாளா உங்களோட பேசணும்னு ஆசை. இன்னைக்குத்தான் உங்களோட பேச தைரியம் கிடைச்சது."

"நீங்க யாருன்னு எனக்குத் தெரியலையே."

"நீங்க வேலை பார்க்கிறீங்களே அட்வர்டைஸ்மெண்ட் ஏஜென்சி, அதே பில்டிங்லதான் நான் வேலை செய்யற ஆபீசும் இருக்கு."

"அப்படியா?"

"நீங்க ஆபீசுக்கு, வர்றப்போ, போறப்போ பல தடவை நான் உங்களைப் பார்த்திருக்கேன். நீங்ககூட என்னைப் பார்த்திருக்கலாம்."

"இருக்கலாம். சரி, என்ன விஷயமா போன் செஞ்சிங்க."

"உங்க வயசு என்ன சார்?"

"இருபத்தெட்டு."

"என் வயசு இருபது. ஒரு இருபது வயசுப் பொண்ணு இருபத்தெட்டு வயசு இளைஞனுக்கு அவளே போன் செஞ்சி பேசினா என்ன அர்த்தம்னு புரியலையா?"

"புரியலையே."

"நீங்க ரொம்ப அழகா இருக்கிங்க சார்."

"அப்படியா?"

"எனக்கு உங்களை, ரொம்பப் பிடிச்சிருக்கு சார்."

"சரி."

"என்ன சார் இவ்வளவு சொத்தையா சொல்றீங்க? நாம ரெண்டு பேரும் இன்னிக்கு ஈவினிங் நேர்ல சந்திச்சுப் பேசலாமா?"

"எதுக்கு?"

"என்ன, இவ்வளவு தூரம் சொல்றேன். அப்புறமும் எதுக்குன்னு கேக்கறீங்க? தெளிவா சொல்லட்டுமா?"

"சொல்லுங்க."

"ஐ லவ் யூ சார். ப்ளீஸ்... நீங்களும் என்னை லவ் செய்யணும்..."

"செய்யலாம். அதில ஒரு சிக்கல் இருக்கு."

"என்ன சிக்கல்?"

"நான் ஏற்கனவே பரணின்னு ஒரு பொண்ணை லவ் பண்ணிட்டு இருக்கேன்."

"சார். நீங்க என்னைப் பார்த்தா அவளைக் கழட்டி விட்டுடுவீங்க. முதல்ல நாம சந்தி[illegible]கலாமே."

"உங்களுக்கு என் பரணியோட அழகைப் பத்தித் தெரியாது. அவ முகம் மட்டும் அ[illegible]ல்லை. குணமும் அழகு. அவகிட்ட நான் அதிகமா[illegible]சிக்கிறது எதைத் தெரியுமா?"

"எதை?"

"அவளோட [illegible]றும்புத்தன[illegible]"

"என்ன பிரமா[illegible]மான குறும்பு[illegible]ம்."

"உதாரணம் [illegible]சால்லட்டுமா[illegible] [illegible]ர்னு போன் செஞ்சி ரிசீவர்ல துணி போட்டு [illegible]ல மாத்தி நான் ஜான்சி பேசறேன்னு சொல்வா."



"ஏய் ராஸ்வா, கண்டுபிடிச்சிட்டிங்களா?"

"முதல் வார்த்தை நீ பேசினதுமே கண்டுபிடிச்சிட்டேன பரணி."

"பின்னே ஏன் தொடர்ந்து அரட்டையடிச்சிங்க?"

"உனக்கு இந்த டிராமால கிடைக்கிற சுவாரசியத்தைக் கெடுக்க வேணாமேன்னுதான்."

"எப்படி கண்டுபிடிச்சிங்க? நான்தான் குரலை மாத்திப் பேசினேன்னு?"

"நீ எப்படி மாத்திப் பேசினாலும் கண்டுபிடிப்பேன். நீ எப்படிப் பேசுவேன்னு ஒரு தொனி இருக்கே. அது எனக்குள்ளே பதிஞ்சிருக்கு சரி, சொல்லு. இப்படி கலாட்டா பண்றதுக்குத்தான் போன் செஞ்சியா?"

"இல்லை, இன்னைக்கு ஈவினிங் வெளில போறோம்."

"ஏய், இரும்மா, எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு."

"ஐ'ம் நாட் பாதர்ட்! ஆறு மணிக்கு உங்க ஆபீஸ் வாசல்ல வெயிட் பண்ணுவேன்."

"எங்க ஆபீஸ் பில்டிங்குக்கு ரெண்டு வாசல் இருக்கு."

"இன்னொரு வாசல் வழியா ஓடிடுவேன்னு சொல்றீங்களா?"

"நாளைக்குப் போலாமே."

"நாளைக்குக் காலைல நான் உங்களுக்குக் கொடுத்தாகணுமே. அதுக்கு இன்னைக்குப் போய் வாங்கினாத்தானே பரவால்லை."

"என்ன வாங்கணும்?"

"ஒரு அட்டகாசமான சட்டை."

"யாருக்கு?"

"உங்களுக்குத்தான்."

"இப்ப எதுக்கு சட்டை? என்கிட்ட நிறைய இருக்கு."

"இருந்தாலும் ஒரு நல்ல நாள்ல புதுச்சட்டை போட்டுக்றதுதான் நம்ம வழக்கம்."

"நல்ல நாளா? நாளைக்கு என்ன பண்டிகை?"

"ஈஸ்வர், நாளைக்கு உங்க பர்த்டே."

"............"

"ஹலோ, என்ன பேச்சையேக் காணோம்?"

"பரணி, சத்தியமா சொல்றேன். உன்னை வைஃபா அடையப்போறேன் பாரு. நான் ரொம்பக் கொடுத்து வெச்சிருக்கணும்."

"நோ நெகிழ்ச்சி பிஸினெஸ்."

"நான்கூட மறந்துட்டேன். நீ ஞாபகம் வெச்சிருந்து..."

"போதும்ப்பா உங்க செண்ட்டிமெண்ட்ஸ். ஈவினிங் ஐ கமிங். யு வெய்ட்டிங். ஓகே?"

"சரி."

எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்கின்ற எண்ணமே நல்ல மன வலிமையை அளிக்கவல்லது.

- ஆல்பர்ட் சுவைட்சர்

அடக்கம் ஓர் அணிகலன் மட்டுமல்ல;
அறத்தின் காவலனும் அடக்கம்தான்.

- ஜோசப் அடிசன்.



# 7

ஃபாரென்சி நபர்கள் வந்து சென்ற பிறகு, போட்டோஸ் எடுத்த பிறகு, போலீஸ் நாய் வந்து முகர்ந்து பார்த்துவிட்டு ஓடிய பிறகு, திவ்யாவின் உடலை போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

சப். இன்ஸ்பெக்டர் தயாளன் எதிர்வீட்டு, பக்கத்து வீட்டு ஜனங்களில் இன்னும் விசாரிக்கப்படாதவர்களை விசாரித்துக் கொண்டிருக்க, ஜீப்பில் வந்து இறங்கின டி.ஐ.ஜி.க்கு சல்யூட் அடித்துவிட்டு அவரை வீட்டுக்குள் நடத்திச் சென்றார் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன்.

"டீடெய்ல்ஸ் சொல்லுங்க" என்றார் டி.ஐ.ஜி.

"விஸ்வம்னு பிஸினெஸ் மேன் சார். அவரோட வைஃப் திவ்யான்னு பேரு. வீட்ல இவங்க ரெண்டே பேர்தான். நேத்து ராத்திரி கொலை நடந்திருக்கு" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஸ்டாபிங்?"

"இல்லை. கழுத்தில கம்பி மாதிரி எதையோப் போட்டு சுத்தியிருக்கணும்."

"பர்க்ளரியா?"

"இல்லை சார், கைல தங்க வளையல்கள் இருக்கு, கழுத்தில செயன் இருக்கு. காதுல வைரக் கம்மல்கள் இருக்கு."

"வேர் ஈஸ் தட் விஸ்வம்?"

"பிஸினெஸ் வேலையா டில்லி போயிருக்கிறதா

தெரிஞ்சது. அட்ரஸ் விசாரிச்சு டெல்லி ஹோட்டல்ல பேசினோம். அவர் ஷெட்டியூல்படி ஃப்ளைட்ல புறப்பட்டிருக்கார் நியூஸ் எதுவும் தெரியாமலேயே. எனி டைம் ஹி ஈஸ் எக்ஸ்பெக்டட் சார்."

"அப்ப இது யாரு?"

"இதுவரைக்கும் எதுவும் தெரியலை."

"ரேப் ஆகியிருக்கா?"

"ஐ டோண்ட் திங்க் ஸோ."

"அப்போ ஏதோ பர்சனல் வென்ஜன்ஸா?"

"அப்படித்தான இருக்கணும்."

"எனி சஸ்பெக்ட்ஸ் ஸோ ஃபார்?"

"இப்பதானே விசாரிக்க ஆரம்பிச்சோம். விஸ்வம் வந்துட்டா தெரிஞ்சுடலாம். அவர் மேல உள்ள பகையில கூட அவர் மனைவியைக் கொலை செஞ்சிருக்கலாம் சார்."

டி.ஐ.ஜி. ரத்தம் உறைந்து போய் அங்கங்கே செதில்களாகத் தேங்கியிருக்க, சாக் மார்க் அவுட் லைன் கொண்ட கொலை நடந்த ஸ்பாட்டைக் கொஞ்ச நேரம் மீசையைத் தடவியபடிப் பார்த்தார்.

"அந்த ஹஸ்பண்ட்டை விசாரிச்சுட்டு, பி.எம். ரிப்போர்ட்டும் பார்த்துட்டு எனக்குப் போன் செய்யுங்க" என்று கூறி விட்டு அவர் புறப்பட, அவர் பின்னாலேயே சென்று, அவர் ஜீப் ஏறிச் செல்லும் வரைக் காத்திருந்து விட்டு...

உடனே ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து வீட்டின் போர்ட்டிகோவில் நின்றிருந்த விஸ்வத்தின் ஃபியட் காரின் பானெட் மேல் குதித்தமர்ந்தார்.

"எனி சஸ்பெக்ட்ஸாம்? கொலை நடந்தா பத்தாப் நிமிஷம் கொலைகாரனைப் பிடிச்சிக் கொடுத்துடணும்" என்று முனகிக் கொண்டவர்



எதிரே வந்த தயாளனிடம், "என்ன, ஏதாச்சும் தெம்பான தகவல் உண்டா?" என்றார்.

"மூணாவது வீட்ல பரமேஸ்வரன்னு ஒரு டீச்சர் இருக்கார் சார். அவர் நேத்து ராத்திரி நகம் வெட்டினாராம்" என்றார் தயாளன்.

"இது நம்ம கொலைக் கேசுக்கு ரொம்பத் தேவையான தகவலா?"

"கேளுங்க சார். வெட்டின நகங்களைக் கொண்டாந்து வீதியில போடறதுக்கு வந்தாராம். அப்போ, ஒருத்தன் டி.வி.எஸ். ஃபிப்டில வந்த இவர் பக்கத்தில நிறுத்தி 'பதினேழாம் நம்பர் வீடு எது சார்?'னு கேட்டிருக்கான்."

"அதுக்கென்னா?"

"இந்த வீடுதான் சார் பதினேழாம் நம்பர் வீடு."

"அடா! அப்புறம்? மேல சொல்லுங்க."

"இவர் மூணாவது வீடுன்னு அடையாளம் சொல்லியிருக்கார். அவன் இவரைத் தாண்டி இந்த வீட்டு வாசல்ல வண்டியை நிறுத்திட்டு உள்ளே நடந்து வரைக்கும் பார்த்திருக்கார்."

"எத்தனை மணியிருக்குமாம் அப்போ?"

"எட்டரை மணியிருக்குமாம்."

"ஆள் எப்படி இருந்தானாம்?"

"அவரால சரியா வர்ணிக்க முடியலை. கறுப்பு பேண்ட், வெள்ளை சட்டைன்னு மட்டும் சொல்றார். சார், உள்ளே திவ்யாவோட பெட்ரூமை நல்லா அலசிப் பார்த்துட்லாமா?"

"அதுக்கு முன்னாடி ஒரு கோல்ட் ஸ்பாட் குடிச்சுட்டு வந்துடறேன். நீங்க முன்னாடிப் போய் அலச ஆரம்பிங்க."

"அவரை ஒரு முறை முறைத்துவிட்டு உள்ளே நடந்தார் தயாளன்.

திவ்யாவின் அறைக்கு வந்தார். ஆராயத் துவங்கினார். ஒரு மணி நேரத்திற்குப் பிறகும் குறிப்பிடும்படி எதுவும் கிடைக்காமல் சற்றே சோர்ந்து போய் கீழே இறங்கி வந்த போது...

டாக்ஸியில் வந்த இறங்கினான் விஸ்வம்.

தன் வீட்டின் வாசலில் போலீஸ்காரர்கள் நிற்பதைப் பார்த்துக் குழம்பி, சூட்கேசுடன் நடந்து வர...

அவனை உள்ளே நுழைந்ததுமே இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன் எதிர் கொண்டு, "நீங்க தானே மிஸ்டர் விஸ்வம்?" என்று கேட்டு, அவன் தலையசைத்ததும், "ஒரு பேட் நியூஸ், நேத்து ராத்திரி உங்க மனைவி திவ்யாவை யாரோ கொலை செய்துட்டாங்க" என்றார்

அவன் அதிர்ந்து போனான்.

இன்னும் நிதானமாக, பக்குவமாக இந்த அதிர்ச்சியான செய்தியைச் சொல்லியிருக்கலாம் என்று பட்டது தயாளனுக்கு.

விஸ்வம் உடைந்து போய் அழத் துவங்க, அவனை சமாதானம் செய்து, அவனை ஆசுவாசப்படுத்தி, அரை மணி நேரத்திற்குப் பிறகுதான் கேள்விகளை ஆரம்பிக்க முடிந்தது.

"மிஸ்டர் விஸ்வம், உங்க மனைவியோட உடலை போஸ்ட் மார்ட்டத்துக்கப்புறம்தான் வாங்கிக்க முடியும். அதுக்க டைம் ஆகும். கொஞ்சம் எங்க விசாரணைக்கு ஒத்துழைச்சா நல்லது."

"சொல்லுங்க சார்" என்று தேம்பினான்.

"இந்தக் கொலையை யார், எந்தக் காரணத்துக்காக செய்திருக்கலாம்னு நீங்க நினைக்கிறீங்க?" என்றார்



புருஷோத்தமன்.

"எனக்கு எதுவும் புரியலை சார்."

"நல்லா நிதானமா யோசிக்க சொல்லுங்க. ஒரு வீட்ல தனியா இருக்கிற ஒரு குடும்பப் பொன்னை கொலை செய்யணும்ன்னா அதுக்கு சில காரணங்களைத் தான் சொல்ல முடியும். பணம், நகைக்காக இருக்கலாம். இங்கே திருட்டு எதுவும் நடக்கலை. கற்பழிப்பு ஒரு காரணமா இருக்கலாம். அதுவும் இங்கே நடக்கலை. இதைவிட்டா ஏதோ முன் விரோதம் கொண்ட நபர்தான் இந்த ப்ருட்டல் மர்டரை செய்திருக்க முடியும் சமீப காலமா ஏதாச்சும் விரோதம் உங்க மனைவிக்கு யார்கிட்டயாவது உண்டா?" என்றார் தயாளன்.

"இல்லை. அவ யார்கிட்டயும் சண்டைக்குப் போக மாட்டா."

"உங்க மேல உள்ள பகையை இப்படி உங்க மனைவியை கொலை செய்யறது மூலமா யாராச்சும் தீர்த்துக்கிடிருக்கலாமா?"

"எனக்கும் அப்படி எதுவும் பகை இல்லையே சார்."

"தயாளன், கொஞ்சம் இப்படி வாங்க. டமால், டமால்னு கேட்டுடணும்" என்ற புருஷோத்தமன், "மிஸ்டர் விஸ்வம், கொஞ்சம் எடக்கு முடக்காதான் கேள்வி கேட்போம். கோவிச்சுக்காம பதில் சொல்லணும். உங்களுக்கும் உங்க மனைவிக்கும் ஏதாச்சும் தகராறு உண்டா?" என்றார்.

"ச்சே! இல்லை சார். நிச்சயமா இல்லை. நேத்து ராத்திரி கூட எஸ்.டி.டி. போட்டு பதினைஞ்சு நிமிஷம், அவளோடப் பேசினேன். அவ ரொம்ப பொஸஸிவ். என் மேல ரொம்ப பிரியம்."

"அதே அளவு பிரியம் நீங்களும்

வெச்சிருந்தீங்களா?"

"நிச்சயமா."

"உங்களுக்கு உங்க மனைவி தவிர வேற ஏதாச்சும் விவகாரம் உண்டா? உண்டுன்னா மறைக்காம சொல்லிடுங்க."

"நான் அப்படிப்பட்டவன் இல்லை சார்."

"உங்க மனைவி திவ்யாவுக்கு வேற யாரோடயாவது தகாத தொடர்பு இருக்கிறதா நீங்க எப்பயாவது சந்தேகப்பட்டதுண்டா?"

"நோ! ஏன் இப்படி எல்லாம் செத்துப் போனவ மேல அபாண்டமா பழி சுமத்தறிங்க?"

"இல்லை ஜஸ்ட் கேக்கறோம். கோவிச்சுக்கக் கூடாதுன்னு சொன்னேனே. கொன்னவன் யாருன்னு ஏதாச்சும் ரூட்ல ஒரு ஐடியா பிடிக்க வேணாமா?"

"புருஷோத்தமன் அவனை மேற்கொண்டு கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்க... தயாளன் நகர்ந்து கொலை நடந்த அ ஹாலுக்கு வந்து கொஞ்ச நேரம் மௌனமாகப் பார்த்தார்.

ஸோபா அருகில் சென்று அமர்ந்தார். டீப்பாய் மேல் நிறைய வார, மாத இதழ்கள் கலைந்து கிடந்தது. அதில் மேலாகக் கிடந்த 'ஓடையின் ஓரத்தில்...' என்கிற கவிதைப் புத்தகத்தை எடுத்தார். புரட்டினார்.

அதன் முதல் பக்கத்தில்

'இக்கவிதைகளை எழுத வைத்தவளுக்கு...

நேசத்துடன், சுந்தர்'

—என்று கையில் எழுதப்பட்டு கீழே தேதியிடப்பட்டிருந்தது. நேற்றைய தேதி! அட்டையில் கவிஞரின் பெயரைப் பார்த்தார்.

'எழுத வைத்தவளுக்கு...' என்கிற



வார்த்தைகளுக்கு அர்த்தம் தேடினார். புத்தகத்தை வெளியிட்டது யாரென்று பார்த்தார். 'அருணோதயம்' என்று போட்டிருந்தது. கவிஞரைப் பற்றி குறிப்பு தேடினார். எதுவும் இல்லை.

அந்தப் புத்தகத்துடன் அடுத்த அறைக்கு வந்தார்.

"சார், இந்த புக் டீப்பாய்ல கிடந்திச்சு. இதைப் படிங்க." என்று புருஷோத்தமனிடம் காட்டினார். "நேத்து தேதி போட்டிருக்கு. இந்த சுந்தர் நேத்து நேர்ல வந்து கொடுத்துட்டுப் போயிருக்கலாம்" என்ற தயாளன், "கவிஞர் சுந்தரை உங்களுக்குத் தெரியுமா மிஸ்டர் விஸ்வம்?" என்றார்.

நெற்றியைச் சுருக்கினான் விஸ்வம்.

"கவிஞர் சுந்தரா? தெரியலையே..."

"எழுத வைத்தவளுக்குன்னு எழுதி கையெழுத்துப் போட்டிருக்காரே."

"புத்தகத்தை வாங்கிப் பார்த்த விஸ்வம், "மை காட்! ஒரு வேளை அந்த சுந்தரா இருக்கலாமா?" என்றார்.

"எந்த சுந்தர்?"

"சார், என் வைஃப் திவ்யா கல்யாணத்துக்கு முன்னாடி சுந்தர்னு ஒரு பையனோட பழகியிருக்கா. அஃப்கோர்ஸ் அவங்க லவ் பண்ணியிருக்காங்க. திடீர்னு அந்த சுந்தருக்கு குடிப்பழக்கம் ஏற்பட்டிருக்கு. அது அதிகமாயிட்டே போயிருக்கு. திவ்யா எவ்வளவு சொல்லியும் கேட்கலை. திருந்தலை. அதனால காதலுக்கு குட் பை சொல்லிட்டு விலகிட்டா."

"இதெல்லாம் உங்களுக்கெப்படி தெரியும்?"

"என்னோட முதலிரவன்னைக்கே நாங்க மனசு விட்டு எல்லாம் பேசினோம். என் வாலிப முறுக்கில் நான் செஞ்ச சில தப்புக்களை ஓபனா சொன்னேன்.

அதே மாதிரி அவளையும் சொல்லச் சொன்னேன். அப்போ சொன்னா. என்னால தாராள மனசோட அந்தச் செய்தியை எடுத்துக்க முடிஞ்சது."

"அந்த சுந்தரை நீங்க அதுக்கப்புறம் சந்திச்சிருக்கீங்களா?"

"இல்லை."

"அவர் என்ன செய்றாரு. எங்கே இருக்கார்னு தெரியுமா?"

"இவ காதலிச்சப்போ ஏதோ ஒரு ரெடிமேட் கடையில சேல்ஸ் மேனா சாதாரண வேலை பார்த்ததா சொன்னா. எந்தக் கடைன்னு நான் கேக்கலை. இந்த டாபிக்கை மறுபடி நாங்க பேசினதே இல்லை."

"சார்" என்றார் தயாளன், "அருணோதயம் பதிப்பகத்தில் விசாரிச்சா இந்த சுந்தரோட அட்ரஸ் பிடிச்சிடலாம் சார்."

"அது எனக்கு தெரியும். இவருக்குத் தெரியுமான்னு கேட்டேன். புக்கைக் கொடுங்க, நானே போய் விசாரிக்கிறேன். இப்ப எனக்கு எல்லாம் புரிஞ்சு போச்சு. இப்ப அந்த குடிகார சுந்தர் திருந்தியிருப்பான். தன் காதலி தன்னை விட்டுட்டதில் பொங்கியிருப்பான். வந்து தீர்த்துட்டுப் போயிட்டான்" என்றார் புருஷோத்தமன்.

"இருங்க சார், அவசர அவசரமா இவ்வளவு சீக்கிரம் ஒரு தீர்மானத்துக்கு வரணும்னு அவசியமில்லை. இவனை ஒன் ஆஃப்தி சஸ்பெக்ட்ஸா வெச்சிக்கலாம்" என்ற தயாளனை ஒரு நெருப்புப் பார்வை பார்த்து விட்டு...

"ஐ நோ. நீங்க சாரை மேற்கொண்டு விசாரிங்க" என்று வேகமாகப் புறப்பட்டார் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன்.



## 8

## இன்னும் ஒரு 'ஃபிளாஸ் பேக்'

"மிஸ்டர் ஈஸ்வர் இருக்காரா?"

"ஸ்பீக்கிங்."

"நாங்க கோகிலா நர்ஸிங் ஹோம்லேர்ந்து பேசறோம். மிஸ். பரணி உங்களுக்கு ஒரு தகவல் கொடுக்கச் சொன்னாங்க."

"சொல்லுங்க."

"அவங்க இங்கே அட்மிட் ஆகி ஸ்பெஷல் வார்ட்ல ஏழாம் நம்பர் ரூம்ல தங்கியிருக்காங்க."

"அய்யோ! அவளுக்கு என்ன?"

"ஒண்ணுமில்லைங்க. ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட். டாக்டர் அட்டெண்ட் செஞ்சிட்டார். ஷி ஈஸ் கான்ஷியஸ். இப்ப ரெஸ்ட் எடுக்கறாங்க. பேசறாங்க. அவங்கதான் உங்க நம்பர் கொடுத்து தகவல் சொல்லச் சொன்னாங்க. அவசரமில்லையாம். ஆபீஸ் முடிஞ்சதும் நீங்க வந்து பார்த்தா போதும்னு சொல்லச் சொன்னாங்க."

"நான் இப்பவே புறப்பட்டு வர்றேன்னு சொல்லுங்க."

"இல்லை சார். பரபரப்பா உடனே வரணும்னு அவசியம் இல்லை."

"உங்களுக்கு அவசியமில்லை. எனக்கு அவசியங்க. நீங்க சொல்லிடுங்க."

"வாங்க ஈஸ்வர்."

"என்ன பரணி இது... கடவுளே! சின்ன ஆக்ஸிடெண்ட்னு இதைத்தான் போன்ல சொல்லச் சொன்னியா? என்னம்மா? எப்படி ஆச்சு?"

"மொபெட்ல வந்துட்டிருந்தேன். லாரிக்காரனுக்கு அவசரம். என்னை ஓவர் டேக் பண்றேன்னு சொல்லி பந்தாடிட்டான். ஜஸ்ட் ரெண்டே ரெண்டு எலும்பு மட்டும்தான் ஃப்ராக்சர் ஆகியிருக்காம்."

"என்ன பரணி, இவ்வளவு சாதாரணமா சொல்றே? உன்னை எப்போ அட்மிட் செஞ்சாங்க?"

"நேத்து ராத்திரி."

"உடனே எனக்குத் தகவல் தர்றதுக்கென்னா?"

"அந்த நிலைமையில ரத்தம் கொட்டி சொதசொதன்னு என்னை நீங்க பார்க்க வேணாமேன்னுதான். ரொம்ப அதிர்ச்சியடைஞ்சிடுவீங்களே..."

"அதுக்காக? என்னவோ! டாக்டர் என்ன சொன்னார்"

"இதே மாதிரி கட்டு போட்டுக்கிட்டு, காலைத் தூக்கி தொட்டில்லயே வெச்சுக்கிட்டு ஆறு வாரம் இதே பெட்ல இருக்கணுமாம். ஜாலி! ஃபுல் ரெஸ்ட்."

"எல்லாமே உனக்கு விளையாட்டா இருக்கா? ஃப்ராக்சர் பத்தி என்ன சொன்னார்? எலும்பு சேர்ந்துடுமில்லையா? நான் போய் டாக்டரைப் பார்த்துப் பேசிட்டு வந்துடட்டுமா?"

"இருங்க ஈஸ்வர். இப்ப டாக்டரே இங்கே வருவார். உட்காருங்க. காலைலேர்ந்து வந்து பார்த்துட்டுப் போனவங்க எல்லாரும் போரடிச்சுட்டாங்க."

"பரணி, நான் ஆபீசுக்கு லீவு போட்டுடறேன்."

"போட்டுட்டு..."

"உன் பக்கத்திலே இருந்து நீ டிஸ்சார்ஜ் ஆகிற



வரைக்கும் கவனிச்சுக்கறேன்."

"அதெல்லாம் நர்ஸ் பார்த்துக்குவாங்க. நீங்க ஏன் லீவு எல்லாம் போடணும்?"

"உனக்காக லீவு போடாம யாருக்காக போடறது? எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு பரணி. ஏன் உனக்கு இந்த மாதிரி சோதனை?"

"அழப் போற மாதிரி தெரியுது. அப்படியா?"

"கிண்டலா இருக்கா?"

"மனமுருக பிரார்த்தனை செஞ்சா எல்லாம் சரியாப் போயிடுமாம் ஈஸ்வர். நீங்களும் பிரார்த்தனை செய்யுங்களேன். ரெண்டு நிமிஷம் கண்ணை மூடி."

"சரி."

"போதும். கண்ணைத் திறந்து பாருங்க."

"ஏ...ய்! என்ன இது, கட்டெல்லாம் பிரிக்கிறே?"

"பிரிக்க வேண்டியது தானே. நீங்கதான் பிரார்த்தனை செஞ்சீங்களே. எல்லாம் சரியாப் போச்சு! இதோ பாருங்க! நோ காயம் அட் ஆல்."

"பரணி! என்ன இதெல்லாம்?"

"நடிப்பு! ஆக்ஷன்! ஏன் ஈஸ்வர் புறப்படறதுக்கு முன்னாடி தேதி என்னன்னு பார்க்கிறதில்லையா? உங்க ஆபீஸ்ல காலண்டர் இல்லையா? இன்னைக்கு ஏப்ரல் ஒண்ணும்மா கண்ணு!"

"என்ன பரணி இது! எதெதுல விளையாடறதுன்னு இல்லை? நான் எவ்வளவு தூரம் துடிச்சிப் போய்ட்டேன் தெரியுமா?"

"ஏப்ரல் ஒண்ணாம் தேதி முட்டாளடிக்கிறதில நோ லிமிட்டேஷன் கண்ணா. உங்ககிட்ட உரிமை எடுத்து விளையாடாம வேற யார்கிட்ட விளையாடறதாம்?"

"திஸ் ஈஸ் டூ மச்!"

"இந்த கலாட்டால ஒண்ணு புரிஞ்சது. நல்ல வேளை. நீங்க 'உன் கால் நொண்டியாய்டுச்சு. அதனால நம்ம காதலை மறந்து'ன்னு சொல்லலை. உங்க லவ்வோட ஆழம் தெரிஞ்சது. ஹாட்ஸ் ஆஃப்."

"என்கிட்டப் பேசாதே!"

"கோபமா? என் ஃப்ரெண்டு இந்த கிளினிக்ல டாக்டர். அவளைப் பார்க்க வந்தேன். திடீர்னு இந்த ஐடியா வந்திச்சு. விளையாடினேன். தப்புன்னா ஸாரிப்பா ஸாரி சொல்லியாச்சுன்னா சிரிச்சுடணும்னு நம்ம ஒப்பந்தம் சொல்லுது டார்லிங். கமான், ஸ்மைல்! அ! பெரிய கமலஹாசன்னு நினைப்பு."

"உன்னை...."

"ஏய்! காது! காது! வலிக்குது. விடுங்க."

சோம்பேறித்தனமாக இருப்பது
தற்கொலைக்குச் சமம்.

- ஆல்வா எடிசன்

அன்பும் நம்பிக்கையுமே ஆன்மாவின்
தாய்ப்பால். அன்பும் நம்பிக்கையும்
பெறாவிடில் ஆற்றல் முழுவதும் அழிந்து
போகும்.

- ரஸ்கின்

உழைப்பை மட்டும் விற்கலாம்;
ஒரு நாளும் ஆன்மாவை விற்கக் கூடாது.

- ரஸ்கின்



# 9

முகத்தில் என்றால் முகத்திலேயே பூட்ஸ் காலால் உதைத்தார் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன்.

"அம்மா" என்று அலறியபடி உடைந்த மூக்கைப் பொத்திக் கொண்டு மல்லாந்து விழுந்தான் சுந்தர்.

அவன் சட்டையைப் பற்றித் தூக்கி நிறுத்தி, "சொல்லு. திவ்யாவை கொலை செஞ்சதை உன் வாயால சொல்லு. எதால கொன்னே?" என்றார், கண்களில் வெறியோடு.

"சார், இவ்வளவு சீரியஸா விசாரிக்கணுமா? கிவ் ஹிம் எ சான்ஸ் டு எக்ஸ்பிளைன் ஹிஸ் பொஸிஷன்" என்றார் தயாளன்.

அவருக்கு சுந்தரைப் பார்த்த முதல் பார்வையிலேயே அவன் குற்றவாளி இல்லை என்று பட்டது.

எந்தக் குற்றவாளியும் கொலை செய்துவிட்டு, போலீஸ் தன்னைத் தேடி வரட்டும் என்று கவிதைப் புத்தகத்தையும் கொடுத்துவிட்டுப் போக மாட்டான்? வந்து அரெஸ்ட் செய்யட்டும் என்று தன் வீட்டிலேயே உட்கார்ந்து காத்திருக்கமாட்டான்.

மேலும் அடி வாங்கி அந்த சுந்தர் இரண்டு கைகளையும் புருஷோத்தமனை நோக்கி கூப்பினான்.

"சார். சத்தியமா சொல்றேன். நான் திவ்யா வீட்டுக்கு நேத்து ராத்திரி போனது உண்மை. புக் கொடுத்தது உண்மை. கொடுத்துட்டு உடனே புறப்பட்டுட்டேன். அதிகப்பட்சம் மூணு நிமிஷம்தான் நான் அந்த

வீட்ல இருந்திருப்பேன். நான் கொலை செய்யலை, அதுக்கான நோக்கமும் இல்லை என்கிட்ட."

"ஏன் இல்லை? நீ திவ்யாவோட பழைய காதலன் தானே?"

"ஆமாம்."

"அவ உன் காதலை ஒதுக்கி துரோகம் செஞ்சாளில்லையா?"

"அது நடந்து முடிஞ்ச கதை சார்."

"அதைத்தான் சார் கேக்கறேன். நீ மொடாக் குடிகாரன் ஆனதும், அவ சொல்லியும் நீ திருந்தாததால் உன்னை விட்டு விலகினாளா?"

"குடிகாரனா? நானா? யார் சொன்னது? என் வாழ்க்கையில ஒரே ஒரு தடவை கள்ளு குடிச்சிருக்கேன். அதுவும் ஒரே ஒரு டம்ளர்."

"உன்னை விட்டுப் பிரிஞ்சதுக்கு நீ குடிகாரனா ஆனதுதான் காரணம்னு திவ்யா தம் புருஷன்கிட்டே சொல்லியிருக்கா."

"அது பொய்! தன்னை பாதுகாத்துக்கறதுக்காகச் சொல்லப்பட்ட பொய்!"

"பின்ன எது உண்மை? ஏன் நீங்க பிரிஞ்சிங்க?"

"சிம்ப்பிள். அப்போ எனக்கு வேலை கிடைக்கலை. கிடைச்சுடும்னு நம்பிக்கை மட்டும் இருந்திச்சு. அவங்க வீட்ல இந்த விஸ்வத்தை மாப்பிள்ளை பார்த்தாங்க. தொழில் இருக்கிறவர். நல்ல வசதி. அதனால அவ மனசு சபலப்பட்டுடுச்சு. நான் ஒரு செல்லாக் காசா தெரிஞ்சேன். தூக்கி எறிஞ்சுட்டா. இதான் உண்மை."

"வெரிகுட்! அந்தக் கோபம் உன் மனசுல இருந்திச்சு. அதனால அவளைத் தேடி வந்து கொலை செஞ்சுட்டே."



"அவளுக்கு கல்யாணமாகி ரெண்டு வருஷமாச்சு. இத்தனை நாள் கழிச்சு யாராச்சும் கொல்வானா?"

"இப்பத்தான் உன் மனசுல கொலை வெறி அதிகமாயிருக்கணும். இதோ பாரு. நீ சாமர்த்தியமா பேசறதை ஜட்ஜ் நம்ப மாட்டார். நாங்க சாட்சிகளோட ப்ரூவ் பண்றதைத்தான் நம்புவார். நேத்து நீ அங்கே வந்ததை மறைக்க முடியாது. சாட்சி இருக்கு. நீ கொடுத்த புக் இருக்கு. காரணம் சரியா இருக்கு. அதனால ஒழுங்கா குற்றத்தை ஒத்துக்கிட்டா தண்டனை குறையும் யோசி."

"சார். நான் சொல்றதை..."

'நக்'கென்று அவன் வயிற்றில் ஒரு குத்து விட்டு விழ்த்திய இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன், "பதிலுக்குப் பதில் பேசாதடா கழுதை! நல்லா யோசி! நாளைக்கு கோர்ட்டுக்கு கொண்டு போற வரைக்கும் யோசி!" என்றார்.

தயாளனுக்கு சங்கடமாக இருந்தது. வலி தாங்காமல் வயிற்றைப் பிடித்து முனகியபடி சுருண்டுக் கிடந்த சுந்தரைப் பார்த்தார். இன்ஸ்பெக்டர் மேல் எரிச்சலாய் வந்தது.

இந்தக் கொலையில் நிஜமான குற்றவாளி யார்? அவனுக்கும் திவ்யாவுக்கும் என்ன பகை இருக்க முடியும்? இதில் ஒரு புதுக்கோணம் பிடித்தாக வேண்டும். இந்த அப்பாவியைக் காப்பாற்றியாக வேண்டும்.

தீவிரமாக யோசிக்கத் துவங்கினார் தயாளன்.

அழகு ஆண்டவனின் அருட் கொடை!

-அரிஸ்டாட்டில்

## 10

# மேலும் ஒரு 'ஃபிளாஸ் பேக்'

"என்ன யோசனை பரணி?"

"ஒண்ணுமில்லை."

"கடலைப் பத்தி ஏதாச்சும் கவிதை எழுதப் போறியா? நாம வந்து உட்கார்ந்ததிலேர்ந்து இமைக்காம பார்த்துக்கிட்டிருக்கே? ஏய்! என்னம்மா முகம் கூட டல்லா இருக்கே பரணி. என்ன, சொல்லு?"

"இல்லை ஈஸ்வர், எனக்குப் பேசற மூடே இல்லை. ஐ'ம் டோட்டலி அப்செட்!"

"அதான் ஏன்னு கேக்கறேன். என்ன ப்ராப்ளம்? வீட்ல யாரோடயாவது தகராறா?"

"ஆமாம்."

"யாரோட...?"

"எங்கப்பாவோட."

"விட்டுக் கொடுத்துப் போக வேண்டியது தானே?"

"அவர் விட்டுக் கொடுக்கச் சொல்றது உங்களை ஈஸ்வர்."

"பரணி! என்ன சொல்றே?"

"நேத்து நம்ம லவ் மேட்டரை நானே ஓபன் செஞ்சிப் பேசினேன். அவர் ரொம்ப நல்ல மூடுல இருந்ததால ஆரம்பிச்சேன். எல்லாம் சொன்னேன்."

"என்ன சொன்னார்?"



"அவரை ரொம்ப பிராட் மைண்ட்னு நான் கணக்குப் போட்டு வெச்சிருந்தது தப்பாப் போச்சு ஈஸ்வர்."

"என்னம்மா சொன்னார்?"

"உங்களை மறக்கச் சொல்றார். அமெரிக்கால டாக்டரா இருக்கிற அவரோட ஃப்ரெண்டு பையனை எனக்காக முடிவு செஞ்சி வெச்சிருக்காராம். கடுமையாக என்னைத் திட்டினார். தன் முடிவை மாத்திக்கப் போறதில்லைன்னு கண்டிப்பா சொன்னார்."

"அப்புறம்?"

"அமெரிக்கால என் வாழ்க்கை எவ்வளவு சுகமா இருக்கும்னு ஒரு மணி நேரம் லெக்சர் அடிச்சார்."

"அவர் லெக்சர் அடிச்சது இருக்கட்டும். நீ என்ன பதில் சொன்னே? அதைச் சொல்லு. அதானே முக்கியம்?"

"நாளைக்கு சொல்றதா சொல்லிட்டேன் ஈஸ்வர்."

"எதுக்கு உனக்கு அவகாசம்?"

"உங்களோட கலந்து பேச வேணாமா?"

"இதில உன் ஸ்டாண்டை உறுதியா சொல்ல வேண்டியது தானே?"

"என் ஸ்டாண்ட்.... குழப்பமா இருக்கு ஈஸ்வர்."

> எதைக் கண்டு ஒரு மனிதனுக்கு
> சிரிப்பு வருகிறதென்று கவனி. அவன்
> எப்படிப்பட்டவனென்று மிக நன்றாகத் தெரிந்து
> கொண்டு விடலாம்.
>
> - கெதே

"ஏய்! பரணி! நீ எப்பவும் போல இன்னைக்கும் ஒரு புது நாடகத்தை ஆரம்பிச்சிருக்கேன்னு நான் நினைக்கிறேன். ரைட்? எவ்வளவு நேரத்துக்கு இந்த டிராமா நடத்தப் போறதா உத்தேசம்?"

"இல்லை ஈஸ்வர். இது டிராமா இல்லை. நிஜமா நடந்தது."

"சரி, இருக்கட்டும். அப்படின்னா நீ அவகாசம் கேட்டது சுத்த பேத்தல் பரணி. நீங்க ஆயிரம் சொல்லுங்க, நான் ஈஸ்வரைக் காதலிக்கிறதும், அவரைத்தான் கல்யாணம் செய்துக்கப் போறதுங்கிறதும் நூறு சதவீதம் உறுதின்னு உடனே உங்கப்பாகிட்டே சொல்லியிருக்க வேணாமா?"

"ஈஸ்வர், வாழக்கையில எல்லா சந்தர்ப்பத்திலேயும் உணர்ச்சிப் பூர்வமாவே இருக்க முடியாது. முக்கியமான கட்டங்கள்ல கொஞ்சம் யதார்த்தத்மாவும் யோசிக்க வேண்டியிருக்குப்பா."

"என்ன சொல்றே பரணி?"

"அப்பா சொல்ற நியாயங்களையும், அவர் பார்த்து வச்சிருக்கிற சம்பந்தத்தில உள்ள ப்ளஸ் பாயிண்ட்டுகளையும் ஒரேயடியா புறக்கணிச்சிட

செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான். செய்யத் தெரியாதவன் போதிக்கிறான்.

– கர்னல் கில்

தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே. தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.

– லெனின்



முடியலை ஈஸ்வர். யோசிக்கப் பார்க்க வேண்டியிருக்கு."

"என்ன எத்திரிச்சிட்டீங்க ஈஸ்வர்?"

"சவனத்துக்கு அப்பாற்பட்டது நம்ம காதலன்னு இத்தனை நாளும் நான் பைத்தியக்காரத்தனமா நினைச்சிட்டிருந்தேன் பரணி. எப்போ நீ யோசிக்கிறதுக்குத் தயாராயிட்டியோ, அப்பவே உன் மனசில உள்ள தடுமாற்றத்தை நான் புரிஞ்சுக்கிட்டாகணும். 'என்னை மறந்துடுங்க'ன்னு நீ சொல்லப் போற வசனத்தை வேற நான் உக்காந்து கேக்கணும்னு நீ எதிர்பார்க்கறியா?"

"ஈஸ்வர், எதுக்காக இப்போ கோபப்படறீங்க? நாம மனசு விட்டு சந்தோஷமாப் பழகினோம். காதல்னு பேர் சூட்டினோம். அதையே நட்புன்னு பேர் சூட்டி ஏன் தொடரக் கூடாது? உங்களுக்கும் என்னை மாதிரி ஒர் பெஸ்ட் சந்தர்ப்பம் கிடைச்சா இப்படித்தான் யோசிப்பீங்க ஈஸ்வர். காதல் எல்லாமே கல்யாணத்துல முடியணும்னு எதாச்சும் விதி இருக்கா? நாம ரெண்டு பேருமே ஏன் ஸ்போர்ட்டிவா எடுத்துக்கக் கூடாது?"

"வாயை மூடு பரணி! இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசினாலும் நடக்கறதே வேற! அமெரிக்காவில் வாழ்க்கை, வசதியான மாப்பிள்ளைன்னு உங்கப்பா ஆசை காட்டினதும் மிட்டாய்க்கு ஆசைப்படற குழந்தை மாதிரி இவ்வளவு சுலபமா காதலை உதறத் துணிஞ்சிட்டு அதுக்கு சமாதானமா வியாக்யானமா சொல்றே? ச்சே! உன் முகத்தில இன்னொரு தடவை முழிக்கிறது கூட கேவலமான விஷயம். நான் வர்றேன்."

# 11

நாற்காலியில் ஸ்டைலாக அமர்ந்து சொல்லப்பட்ட திசையில் ஒரு ஆங்கசொத்தைப் பிடித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள் சௌந்தர்யா.

அவளை நோக்கி இரண்டு விளக்குகளை ஸ்டாண்டில் பொருத்தி வைத்திருந்த ஈஸ்வர், கழுத்தில் மாட்டின கேமிரா வழியாக அவளைப் பார்த்தான். போட்டோ எடுப்பதற்காகவே ஷாம்பூ போட்டுக் குளித்து தலையை பம்மென்று ஆக்கியிருந்தாள். சொன்னபடி புருவங்களை ட்வீஸ் செய்து முகத்தை ப்ளீச் செய்திருந்தாள். லிப்ஸ்டிக் தடவி மேலே பளபளப்பு தரும் க்ளோஸ் தடவியிருந்தாள். தோள்களை சற்று அதிகமாக வெளிப்படுத்தும் டாப்ஸ் அணிந்து ஜீன்ஸ் ஸ்கர்ட் அணிந்திருந்தாள்.

வித்வான் சுப்பிரமணி சற்றுத் தள்ளி ஒரு நாற்காலியில் அமர்ந்து தன் எவர்சில்வர் வெற்றிலைப் பெட்டியிலிருந்து எடுத்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார்.

"சின் - அப்!" என்றான் ஈஸ்வர்.

"என்ன செய்யணும்? என்றாள் புரியாமல்.

"முகத்தைக் கொஞ்சம் தூக்கணும். அந்தப் பக்கம் இல்லை, இந்தப் பக்கம், அவ்வளவு தூரம் வேணாம், கழுத்துல மடிப்பு விழக் கூடாது. வெய்ட். நான் வர்றேன்."

ஈஸ்வரே கிட்டே வந்து சௌந்தர்யாவின்



முகத்தை இரண்டு கைகளாலும் தொட்டு தனக்குத் தேவையான போஸில் நிறுத்தி. "அப்படியே அசையாம இரு. உதட்டை ஈரம் பண்ணிக்க. முகம் பிரைட்டா இருக்கணும். நான் சொல்றப்ப லேசா சிரிச்சாப் போதும் ஓக்கே?"

சற்றுத் தள்ளிச் சென்று கோணம் பார்த்து. "ரெடி, ஸ்மைல்" என்றான். சௌந்தர்யா சிரித்ததும் 'க்ளிக்' என்று தட்டினான். "அப்படியே இரு" என்று மற்றொரு முறை தட்டினான்.

வித்வானிடம் வந்தான், "சார், ஏழு விதமா பல காஸ்ட்யூம்ல எடுத்திருக்கேன். போதுமில்லை?"

அவர் வாய் முழுக்க வெற்றிலையோடு சிரித்தார்.

"என்ன சார் சிரிக்கிறீங்க?"

"நாம போட்டோ எடுக்கிறது சினிமாக்காரங்களுக்கு காட்டி சான்ஸ் வாங்கிறதுக்காக. நீங்க எடுத்த போஸ் எல்லாம் ஃபேன்ஸியாவும், டீஸண்ட்டாவும் இருக்கு. இதுவும் வேணும். சௌந்தர்யாவோட கவர்ச்சி வெளிப்படற மாதிரி கிளாமரா, கொஞ்சம் செக்ஸியா ஒரு ஸ்டில் எடுத்துக் கொடுத்துடுங்க சார்."

"கிளாமரான்னா எந்த மாதிரி?..

"ஜாக்கெட் இல்லாம ஒரு கிராமத்துப் பொண்ணு மாதிரி சேலை கட்டி நல்லா நனைச்சி விட்டுடுங்க. இல்லைன்னா ஒரு டவல் மட்டும் கட்டிக்கிட்டு சோம்பல் முறிக்கிற மாதிரி எடுங்க."

"எனக்கு எதுவும் இல்லை சார். இந்தப் பொண்ணு ஒத்துக்குமா?"

"நாய் வேஷம் போட்டா குரைச்சுத்தான் ஆகணும், சினிமால வரணும்னா இப்படியெல்லாம் செஞ்சிதான் ஆகணும். நாளைக்கு டைரக்டர் இந்த மாதிரி கவர்ச்சியா நடிக்கச் சொன்னா, செய்யாம

இருக்க முடியுமா? நான் எல்லாம் சொல்லித் தான் கூட்டிட்டு வந்திருக்கேன்" என்றார் சுப்பிரமணி. "நான் இருந்தா சங்கோஜமா இருக்கும்னு சொல்லிச்சு. அதனால நான் கடைத்தெரு வரைக்கும் போயிட்டு வந்துடறேன். ஒரு மணி நேரம் கழிச்சு வர்றேன். உங்களுக்கு எந்தப் போஸ்ல எடுத்தா சரியா வரும்னு தோணுதோ, அந்தப் போஸ்ல எடுங்க."

சுப்பிரமணி புறப்பட்டுச் சென்றதும், தன் மேஜையில் இருந்த சிகரெட் பாக்கெட் எடுத்து ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான் ஈஸ்வர். சௌந்தர்யாவைப் பார்த்தான். அவள் அங்கிருந்த ஒரு சினிமா இதழைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

"சௌந்தர்யா..."

"ம்..?"

"உன்னை... அடுத்தது கொஞ்சம் செக்ஸியா எடுக்கச் சொல்லிட்டுப் போயிருக்கார்" என்றான் சற்றேத் தயக்கத்துடன்.

"நான் ரெடி. போஸ் எப்படின்னு சொல்லுங்க சார்" என்றாள் உடனே.

"வந்து... ஒரு டவல் மட்டு கட்டிக்கிட்டு..."

"ஒக்கே. டவல் இருக்கா? தர்றீங்களா? மெல்லிசா இருக்கணுமில்ல டவல்? மேல நனைச்சி விடுவீங்க இல்லையா? என்ன சார் அப்படிப் பார்க்கறீங்க? இது ஒண்ணும் புதுசு இல்லையே. உடம்புல துண்டு துணி கூட இல்லாம என் மாமா கொண்டு போய் விட்ட எத்தனையோ பேர் முன்னாடி நின்னாச்சு சாரி. சினிமா சான்ஸ்னு சொல்லிச் சொல்லி என்னை வெச்சு வியாபாரம் பண்றார் சார். இந்தப் போட்டோஸ் எல்லாம் சினிமாக்காரங்களுக்கு காட்றதுக்கு இல்லை. புரோக்கர்ஸ்கிட்ட கொடுத்து புதுசா எனக்கு கஸ்டமர்ஸ் பிடிக்கிறதுக்காக" என்றாள் சௌந்தர்யா



படபடவென்று.

"அப்படியா? இதெல்லாம் நீ இஷ்டமில்லாம செஞ்சிக்கிட்டிருக்கியா?"

"ஆரம்பத்தில அப்படி இருந்திச்சு. இப்ப பழகிடுச்சு. எனக்கு எதையோ ஊத்திக் கொடுத்துதான் அனுபவிச்சதோட இல்லாம, தன்னோட ரெண்டு ஃப்ரெண்டுக்கும் பணம் வாங்கிட்டு கூட்டிக் கொடுத்தார். அந்தக் கன்றாவி காட்சியை எல்லாம் போட்டோ எடுத்து வெச்சிக்கிட்டு என்னை மிரட்டி மிரட்டி என்னை தொழில் முறை விபசாரியாக்கிட்டார் சார்."

"மைகாட்! வெளியுலகத்திற்கு அவர் எவ்வளவு கண்ணியமா இருக்காரு ஒரு வீணை வித்வான் இப்படி எல்லாம் நடந்துப்பார்னு யாராச்சும் நம்ப முடியுமா?"

"வாழ்க்கைல நடக்கற சம்பவங்கள்ல சிலது இந்த மாதிரி நம்ப முடியாததாத்தான் இருக்கும் சார். இப்ப எனக்கு வருத்தமே இல்லை. விரக்தியே சகஜமாகிடுச்சி. எனக்கு இந்த தண்டனை வேணும் சார்."

"ஏன்?"

"உங்ககிட்ட மனசுவிட்டுச் சொல்லத் தோணுது. நான் ஒரு பெரிய துரோகம் செஞ்சிட்டேன் சார்."

"யாருக்கு?"

"விமல்குமாருக்கு அவர் என் காதலர். நாங்க ரெண்டு பேரும் உயிருக்குயிரா காதலிச்சோம். அவர் ஒரு நல்ல வேலையில இருந்தார். என்னைக் கல்யாணம் செய்துக்கறதா இருந்தார். கல்யாணமாகியிருந்தா என் மனசுக்குப் பிடிச்ச அவரோட ஒரு நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்துகிட்டிருப்பேன். எல்லாம் போச்சு."

"என்ன நடந்தது?"

"என் மாமாதான் காரணம். நான் ரொம்ப அழகா இருக்கிககறதாவும், தனக்கு சினிமால எல்லாரையும் தெரியும்னும், என்னை ஒரு சினிமா நடிகையாக்கி ஸ்ரீதேவி லெவலுக்குக் கொண்டு போய் உட்கார வைக்கிறதாவும் ஆசை காட்டினார். அவர் சொன்ன ஜாலமான வார்த்தைகள் என் அறிவை மழுங்கடிச்சிடுச்சி. காதலை முறிச்சிட்டு தன்னோட வரச்சொன்னார். நானும் மடத்தனமா அவர் பேச்சை நம்பி என் விமல்குமார் மனசை நோகடிச்சுட்டு வேற இடத்தில் கல்யாணம் நிச்சயமாயிடுச்சின்னு பொய் நாடகமாடிட்டு மெட்ராஸ் வந்துட்டேன். அவருக்கு நான் செஞ்ச துரோகத்துக்குத்தான் இப்போ சீரழியறேன்."

அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த ஈஸ்வரின் நெற்றி நரம்புகள் முறுக்கேறி புடைத்தன.

"போட்டே எடுத்துடலாமா சார்?"

"வேணாம்."

"அவர் வந்து கேப்பாரே."

"எடுத்தாச்சுன்னு சொல்லிடறேன்."

"அப்புறம் போட்டோ கேட்பாரே."

"சரியா விழலைன்னு சொல்லிடறேன். நீ வீட்டுக்குப் போகலாம்."

அவன் குரலில் ஒரு உத்தரவு, கண்டிப்பும் திடீரென்று ஏற்பட்டிருப்பதை கவனித்த சௌந்தர்யா எதுவும் பேசாமல் தான் கொண்டு வந்த உடைகளையும், ஒப்பனை பொருட்களையும் எடுத்து பேகில் போட்டுக் கொண்டு புறப்பட்டுச் சென்றாள்.

ஈஸ்வர் சேரில் அமர்ந்து சிந்தனையோடு சிகரெட் பிடிக்கத் துவங்கினான். கொஞ்சம் நேரம்



கழித்து அருகில் கிடந்த செய்தித்தாளை எடுத்துப் பார்த்தான். அதில் திவ்யா கொலை வழக்குப் பற்றி செய்தி வந்திருந்தது.

'தொழிலதிபர் மனைவி கொலை வழக்கில் துப்பு துலங்கியது.'

'தொழிலதிபர்' விஸ்வத்தின் மனைவி திவ்யா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து போலீஸார் தீவிரமாக விசாரணை நடத்தி அந்தக் கொலையைச் செய்த குற்றவாளி சுந்தரை கைது செய்தார்கள்.

சுந்தர் திவ்யாவின் முன்னாள் காதலன் ஆவார். தனக்கு துரோகம் செய்த திவ்யாவை ஆத்திரம் காரணமாக அவர் கொலை செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த வழக்கை விசாரித்து வரும் போலீஸ் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன் 'இதுவரை குற்றவாளி தன் குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்றாலும், அவர்தான் கொலையாளி என்பதற்கு சரியான சாட்சிகளும், தடயங்களும் இருப்பதாகக் கருத்து தெரிவித்தார்.

செய்தியைப் படித்து முடித்த ஈஸ்வரின் முகம் சுருங்கியது அவசரமாக எழுந்து கொண்டான். வீட்டைப் பூட்டிக் கொண்டு பைக்கில் புறப்பட்டான்.

தனக்குத் தெரிந்த விஷயங்களை மட்டுமே மனிதன் பேச ஆரம்பித்தால் உலகில் பூரண அமைதி ஏற்படும்.

- பெர்னாட்ஷா

அன்பு என்பது கண்ணுக்குத் தெரியாத நீரூற்று. அது எப்போது எப்படி தோன்றுகிறது என்பதை நாம் அறிய முடியாது.

# 12

கடைசியாக ஒரு 'ஃபிளாஷ் பேக்'

"ஹலோ, ஈஸ்வர் பேசறேன்."

"நான் பெருமாள் பேசறேன் ஈஸ்வர்."

"சொல்லு."

"நேத்து ஏர்-இந்தியா விமானம் ஒண்ணு கிராஷ் ஆனது தெரியுமா?"

"தெரியும், பேப்பர்ல படிச்சேன். அதுக்கு என்ன?"

"அந்த விபத்தில் உன்னோட முன்னாள் காதலி பரணியும், அவள் புருஷனும் மாட்டியிருக்காங்க."

"அப்படியா? அது எனக்குத் தெரியாது."

"என் சொந்தக்காரர் ஒருத்தரும் இந்த விபத்தில் இறந்துட்டார். அவர் பாடி வாங்கிறது சம்பந்தமா ஏர் போர்ட் போயிந்தேன். அப்பத்தான் எனக்கு இந்த சேதி தெரியும். கல்யாணமாகி மூணாம் நாள் ஜோடியா அமெரிக்கா புறப்பட்டிருக்காங்க. பாவம் இல்லை? ஏர்போர்ட்ல அவங்கப்பா, அம்மா கதறினதைப் பார்க்கணுமே."

விலைவாசி ஏற்றம் குருவியையும்
'விட்டுவைக்கவில்லையோ....
சின்னதாய் கட்டியது கூடு.



"பெருமாள், என் மனசுல கொஞ்சம் கூட துக்கமே இல்லைடா."

"என்ன இப்படிச் சொல்றே?"

"அதான் உண்மை. இது குரூர திருப்தியா இருக்கலாம். ஆனா நிஜம். எனக்கு இப்போ சந்தோஷமா இருக்கு. அவளுக்கு இந்தத் தண்டனை வேணும். இந்த விபத்தில அவ சாகலைன்னா கூட என்னால ஏதாவது ஒரு வழில தண்டிக்கப்பட்டிருப்பா. அந்த அளவுக்கு எங்கிட்ட வெறி இருக்குது தெரியுமா...?"

"அந்த மாதிரி எல்லாம் சொல்லாதே ஈஸ்வர். அவ உனக்கு துரோகம் செஞ்சிருக்கலாம். ஆனா இப்போ இறந்துட்டாங்கிறப்ப மனுஷத்தனத்தோட அவ ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்யறதுதான் முறை!"

"என் ஆத்மா எபபடிடா சாந்தியடையும்? அவ செத்தாக் கூட எனக்குள்ளே அந்த சம்பவங்களும், துரோகமும் பசுமையா உக்காந்திருக்கே. அதை எப்படி அழிக்கிறது?"

## PHONE மொழிகள்




எலிக்கு phone கிடைத்தால்
புலிக்கும் miss call
அடிக்குமாம்.

எத்தனை பழமொழி sms
பண்ண ஆசைப்பட்டாலும்
phoneல credit இருந்தால்
தான் அது deliver ஆகும்.

# 13

ஒலித்த போனை எடுத்தார் சப்-இன்ஸ்பெக்டர் தயாளன்.

"ஹலோ சப்-இன்ஸ்பெக்டர் ஸ்பீக்கிங்."

"வணக்கம் சார். திவ்யா கொலைல குற்றவாளின்னு சுந்தரைப் பிடிச்சு வெச்சிருக்கிங்களே, அந்தான் அப்பாவி சார். அவன் இந்தக் கொலையை செய்யலை. சந்தர்ப்பவசத்தால எக்குத்தப்பா அவன் இதில மாட்டியிருக்கான். அவனை சித்ரவதை செய்ய வேணாம், பாவம்! அவனை விட்டுடுங்க. உண்மையான குற்றவாளியைத் தேடறதுக்கு முயற்சி பண்ணுங்க" என்று ஆண் குரல் ஒலித்தது எதிர்முனையிலிருந்து.

"சுந்தர் குற்றவாளி இல்லைன்னு எதை வெச்சு சொல்றிங்க?"

"திவ்யாவைக் கொலை செஞ்சது நான்தான் சார். அதனால சொல்றேன்."

"மைகாட்! யார்றா நீ?"

"ஸாரி. இப்போதைக்கு மாட்டிக்கிறதா இல்லை. வெச்சிடவா?"

"தயாளன் உடனே இன்ஸ்பெக்டர் புருஷோத்தமனிடம் வந்தார். போன் விவரங்களைச் சொன்னதும் அவர் வாய் விட்டுச் சிரிக்கத் தொடங்கினார்.

"நல்ல தமாஷ்!"

"சார். அவன் சீரியஸாப் பேசினான். நீங்க



சிரிக்கறீங்களே..."

"தயாளன், உங்களுக்கு அனுபவம் பத்தலை. அதான் பதட்டப்படறிங்க. இந்த சுந்தரோட வக்கில் வந்து ஜாமீன்ல விடச்சொல்லிக் கேட்டாரா, அதுக்கு நான் மறுத்தேனா. அதனால கேசை டைவர்ட் பண்றதுக்காக இந்த மாதிரி சொல்லிக் கொடுத்து செட்டப் செஞ்சி எவனையோப் பேச வெச்சிருக்காரு. இதை எல்லாம் போய் நம்பறீங்களே..."

"எந்த வக்கீலும் இப்படி எல்லாம் விளையாட மாட்டான் சார்."

"எந்த நிஜ கொலைகாரனும் இந்த மாதிரி போன் செய்ய மாட்டான்."

"அவன் மனதளவில் பாதிக்கப்பட்டவனா இருக்கலாம்."

"இன்ஸ்பெக்டர் சீரியஸாகி தயாளனை முறைத்து, "இந்த எடக்கு மடக்கு கேள்வி எல்லாம் என்கிட்ட வேணாம், எனக்குத் தெரியும். குறறவாளி சுந்தர். அவன் நம்ம கஸ்டடில இருக்கான். அவனை எப்படி ஒப்புக்க வைக்கிறதுன்னு எனக்குத் தெரியும். போய் வேலைப் பாருங்க."

"அப்போ இந்தக் கால் தொடர்பா எந்த நடவடிக்கையும் எடுக்கப் போறதில்லையா?"

"ஒரே ஒரு நடவடிக்கைதான் எடுக்கணும்?"

"என்னது?"

"இந்தப் போனை மறந்துடறதுதான்" என்று சிரித்த இன்ஸ்பெக்டரை எரிச்சலாக பார்த்தார் தயாளன்.

> அவரவர் விதி அவரவர் கையிலேயே இருக்கிறது.
> - விவேகாநந்தர்

## 14

அமுதா மருத்துவமனையை ஒரு முறை நிமிர்ந்து பார்த்தான் ஈஸ்வர். அதன் பிறகு உள்ளே நுழைந்தான்.

ஈஸ்வர் இப்போது ஒட்டுத்தாடி, ஜிப்பா என்று அடையாளம் மாறியிருந்தான்.

அந்த நவீன மருத்துவமனைக்குள்ளே வந்து பழக்கப்பட்டவன் போல படிகள் ஏறி முதல் மாடிக்கு வந்தான்.

சுவர்களில் கிரானைட் பதிந்திருந்தது. தரையில் மார்பிள். அந்த ஆஸ்பத்திரி மொத்தமும் குளிர்விக்கப்பட்டு அழகழகான நர்சுகள் யூனிபார்ம்களில் ஓசையின்றி நடந்தார்கள்.

டாக்டர் அமுதா என்று போர்டு தாங்கிய கதவுக்கு முன்பாக போடப்பட்டிருந்த பாலிமர் நாற்காலிகளில் ஏற்கனவே இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள்.

ஸ்டூல் போட்டு உட்கார்ந்திருந்த யூனிபார்ம் அணிந்த பையனை நெருங்கினான் ஈஸ்வர்.

"தம்பி, நான் வுமன்ஸ் எரா பத்திரிக்கையிலேர்ந்து வர்றேன். ரிப்போர்ட்டர். டாக்டருக்கு ஏற்கனவே போன் செஞ்சி அப்பாயிண்ட்மெண்ட் வாங்கியிருக்கேன். பேட்டி எடுக்கிறதுக்கு வரச்சொல்லி டைம் கொடுத்திருக்காங்க டாக்டர்" என்றான்.

"இப்படி உக்காருங்க. – கேட்டுட்டு வர்றேன்" என்றவன் உள்ளே சென்றுவிட்டுத் திரும்பி



வந்து, "ரெண்டு பேஷண்ட்ஸ் பாக்கியிருக்காங்க. அவங்களைப் பார்த்துட்டு உங்களைக் கூப்புடறதாச் சொன்னாங்க டாக்டர். உக்காருங்க" என்றான்.

ஈஸ்வர் – உட்கார்ந்து தன் ஜோல்னாப் பைக்குள்ளிருந்து ஒரு பத்திரிக்கை எடுத்துப் படிக்கத் துவங்கினான்.

அரை மணி நேரமாகியது அந்த இரண்டு நோயாளிகளையும் பார்த்து அனுப்பிவிட்டு அவனை அழைப்பதற்கு.

உள்ளே வந்து வணக்கம் வைத்தான் ஈஸ்வர்.

டாக்டர் அமுதா இளமையாக இருந்தாள். கொண்டை போட்டு ஆர்ச்சாக பூ வைத்திருந்தாள். கண்ணாடியணிந்திருந்தாள். கழுத்தில் மாட்டியிருந்த ஸ்டெத்தாஸ்கோப்பைக் கழற்றி மேஜையில் வைத்துவிட்டு. மேஜை மேலிருந்து பொருள்களை ஓரமாய் ஒதுக்கினாள்.

"என்ன மாதிரியான பேட்டி இது? சொல்லுங்க. அதுக்கு முன்னாடி எந்த அடிப்படையில என்னைப் பேட்டி எடுக்க தேர்ந்தெடுத்தீங்க?" கேட்டுவிட்டு மேஜையில் முழங்கைகளை ஊன்றி முகத்தில் இரண்டு கைகளையும் பதித்துக் கொண்ட அமுதாவின் வகிட்டின் துவக்கத்தில் குங்குமம் மெருன் நிறத்தில் இருந்தது. அவள் முதுகுக்குப் பின்னால் அவளருகில் நின்று சிரித்த அவள் கணவன் டாக்டர் ராஜனும் கண்ணாடி அணிந்திருந்தான்.

> தரையோடு தரையாக நசுக்கப்பட்டாலும்
> சத்தியம் மறுபடியும் எழுந்து நின்றுவிடும்.
> ஆண்டவனுடைய முடிவில்லாத நாட்கள்
> அதற்கும் உண்டு. – பிரையண்ட்

"சொல்றேன் டாக்டர். உங்களுக்கு ரோஜா வார இதழ் படிக்கிற பழக்கம் உண்டா?

"ரெகுலரா பார்க்கறதில்லை. எப்பவாவது பார்த்தா புரட்டுவேன்."

"அதில ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி 'கடற்கரை காதலர்கள்' அப்படின்னு ஒரு பேட்டி கட்டுரை போட்டிருந்தாங்க. திடீர்னு கடற்கரைல இருக்கிற காதல் ஜோடிகள் கிட்டப் போயி அவங்க காதலைப் பத்தியும், அது எப்படி ஏற்பட்டது. எப்போ எப்படி கல்யாணம் பண்ணிக்கப் போறாங்கன்னு கேட்டும் ஒரு சுவாரசியமான கட்டுரை கொடுத்திருந்தாங்க. அதில் நாலு ஜோடிகளோட பேட்டி வந்திருந்திச்சு. ஒரு காதல் ஜோடி நீங்களும், கணேசபாண்டியனும். உங்க ரெண்டு பேர் போட்டோவும் கூட வந்திருந்திச்சு. கரெக்ட்டா?"

அமுதாவின் முகம் இருட்டாகியது. இப்போது ஏன் அதை எல்லாம் பேசுகிறாய் என்பது போல் முகம் சுளித்துப் பார்த்தாள்.

"அப்போது நான் மெடிக்கல் முடிச்சு கிளினிக் வைக்க வசதி இல்லாததால கவர்ன்மெண்ட் வேலைக்கு முயற்சி பண்ணிக்கிட்டிருந்த நேரம்.

எதைக் கண்டு ஒரு மனிதனுக்கு
சிரிப்பு வருகிறதென்று கவனி. அவன்
எப்படிப்பட்டவனென்று மிக நன்றாகத் தெரிந்து
கொண்டு விடலாம். - கெதே

அறிவு என்பது நம்முடைய ஒரு பகுதியாக
இருக்கிறது. ஆனால், இதயம் நம்முடைய
ஒவ்வொரு பகுதியாக இருக்கிறது. - ரிரேஸ்



அப்கோர்ஸ், கணேசபாண்டியனோட நெருக்கமா பழகனேன். அப்புறம் பல சூழ்நிலை காரணமா அவரை மறந்துட்டு டாக்டர் ராஜனை கல்யாணம் செய்துக்க வேண்டியதாப்போச்சு. அதனால பழைய மேட்டர் பேச வேணாம். ப்ளீஸ்..."

"அதே பத்திரிகையில பத்து நாள் முன்னாடி வந்த இஷ்யூல அதே நிருபர் அந்த பழைய கட்டுரையை நினைவுபடுத்தி 'அந்த காதல் ஜோடிகள் என்ன ஆனார்கள்? னு விசாரிச்சு ஃபாலோ -அப் கட்டுரை கொடுத்திருக்கார் டாக்டர். அந்த நாலு ஜோடிகள்ல ரெண்டு ஜோடிகள் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருக்காங்க. ரெண்டு ஜோடிகள் பிரிஞ்சுகிட்டாங்க. பிரிஞ்ச ஜோடில நீங்களும் ஒருத்தர். உங்க பழைய காதலர் கணேசபாண்டியன் தன் காதல் தோல்விக்கு நீங்கதான் காரணம்னும், துரோகம் செய்துட்டதாவும் சொல்லிருக்கார். இதுக்கு உங்க பதில் என்னன்னு தெரிஞ்சுக்கத்தான் நான் வந்தேன்."

"இது நடந்த முடிஞ்ச என் பர்சனல் விஷயம். எதுக்காக இதைப் பத்தி இப்போ எழுத விரும்பறீங்க?"

"என்ன மேடம், நீங்க சிட்டில லீடிங் டாக்டர். உங்களைப் பத்தி ஒரு பத்திரிகைல செய்தி வந்திடுச்சு. அதைத் தொடர்ந்து பேட்டி எடுக்கறதில தப்பில்லையே..."

"ஓக்கே. சொல்றேன் ஒரு பெரிய ஹாஸ்பிடல் கட்டி நிறைய பேருக்கு வைத்தியம் பார்க்கணும்ங்கிறது என் லட்சியமா இருந்தது. கணேசபாண்டியன் ஒரு சாதாரண வேலையிலதான் இருந்தார். அந்தச் சமயம் ஒரு பார்ட்டில டாக்டர் அறிமுகம் கிடைச்சது அவர் என் மேல காதலை வளர்த்துக்கிட்டார். அவர் பெரிய கோடீஸ்வரர். அவர் தன் காதலை வெளிப்படுத்திட்டு எனக்கு ஒரு பெரிய ஹாஸ்பிட்டல் கட்டித்

தர்றதாவும் சொன்னார். எனக்கு அவர் காதலை விட என் லட்சியம் நிறைவேற வழி செய்யறதாச் சொன்னது கவர்ந்திச்சு. ஒரு பெரிய ஆஸ்பத்திரியில நிறைய பேருக்கு வைத்தியம் செய்யற நல்ல ஒரு சமூகப் பணிக்கு சந்தர்ப்பம் கிடைக்கறப்போ காதலை தியாகம் செய்யறது தப்பில்லைன்னு பட்டது. ஸோ, நான் என் முடிவை பக்குவமா கணேசபாண்டியன்கிட்டே எடுத்துச் சொல்லிட்டு விலகிட்டேன். நீங்க பத்திரிகையாளர். உங்களுக்கு நான் செஞ்சது துரோகமாப் படுதா? யோசனை செஞ்சி சொல்லுங்க." என்றாள் அமுதா.

ஈஸ்வர் எழுந்து கொண்டான். அந்த அறைக்குள்ளேயே மெதுவாக நடந்தான். அவளருகில் வந்தான். உதடு துடிக்கப் பேசினான்.

"காரணம், எதுவா இருந்தாலும் காதலுக்கு துரோகம் செய்யக் கூடாதுங்கிறது என் பாலிஸிங்க. பாதிக்கப்பட்ட அந்தக் காதலர்கள் மனசை நினைச்சுப் பார்க்கணும். அந்த கணேசபாண்டியன் வெறுத்துப் போய் இன்னைக்கு வரைக்கும் கல்யாணம் செய்துக்கலை தெரியுமா? நானும் இன்னைய வரைக்கும் கல்யாணம் செய்துக்கலை தெரியுமா?"

## காதல்!

வெகுநாட்கள் கழித்து
சந்திக்கும் கணத்தில்
நம் விழி பொங்கும் கண்ணீரில்
கப்பல்விடக் காத்திருக்கிறது
காதல்!



"நீங்க கல்யாணம் செய்துக்காததுக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?"

"நானும் அவரை மாதிரி ஒரு பாதிக்கப்பட்ட காதலன். எனக்கு துரோகம் செஞ்சவளுக்கு ஆண்டவன் உடனே தண்டனை கொடுத்தாச்சு. ஆனா, உலகத்தில உங்களை மாதிரி நம்பிக்கை துரோகிகளை பாதிக்கப்பட்டவங்க எல்லோரும் பழிவாங்கறதில்லை. அவங்க பிரதிநிதியா நான் வந்திருக்கேன்."

"வாட் டு யு மீன்?"

"கிட்டே நெருங்கி வந்த ஈஸ்வர், திடீரென்று அந்த ஸ்டெத்தஸ் கோப் எடுத்து அதனால் அவசரமாக அவள் கழுத்தைச் சுற்றினான். எதிர்பாராத இந்தத் தாக்குதலுக்குத் தயாராக இல்லாத அமுதா போராடத் துவங்கும் முன்பாகவே, தன் கைகளில் அழுத்தத்தைக் கூட்டினான் ஈஸ்வர்.

அடுத்த நிமிடத்தில் உயிரை தன் உடமபிலிருந்து விலக்கிய அமுதா சரிந்து தரையில் விழுந்தாள். அல்லது விழுந்தது.

தன் கைக்குட்டை எடுத்த ஈஸ்வர், ஸ்டெத்தாஸ்கோப்பில் தான் தொட்ட இடங்களைத் துடைத்துவிட்டுப் புறப்பட்டான். வெளியே வந்து அந்தப் பையனுக்குப் புன்னகைத்து, "டாக்டர் ரெஸ்ட் எடுக்கறதாச் சொன்னார். அரை மணி நேரத்துக்கு அவங்களை யாரும் தொந்தரவு செய்ய வேணாம்னு சொல்லச் சொன்னார். வரட்டுமா?"

"சரி சார்"-என்றான் பையன் சமர்த்தாக.

ஆஸ்பத்திரியின் வாசலை நோக்கி நிதானமாக நடந்தான் ஈஸ்வர்.

# 15

டாக்டர் ராஜன் துக்கத்தின் உச்சியில் இருந்தார். அவர் கண்கள் சிவந்து போயிருக்க, சிந்தி சிந்தி மூக்கின் நுனியும் சிவந்திருந்தது. கொஞ்ச நேரம் அமைதியாய் இருந்துவிட்டு, திடீரென்று பொங்கி அழுதுகொண்டிருந்தார்.

அவர் அழுகையை நிறுத்தும் சமயங்களில் எல்லாம் அருகில் அமர்ந்திருந்த இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். சப்-இன்ஸ்பெக்டர் தயாளன் டாக்டர் அமுதாவின் உடலை ஆஸ்பத்திரிக்கு அடாப்ஸிக்கு அனுப்புவதற்காக ஏற்பாடுகளை செய்துவிட்டு அங்கே வந்தார்.

"என்ன தயாளன்?" என்றார் புருஷோத்தமன்.

"பத்திரிகை ஆபீசுக்கு போன் செஞ்சி எடிட்டர் கூடவே பேசிட்டேன். அவங்க எந்த ரிப்போர்ட்டரையும் இந்த ஆஸ்பத்திரிக்கு பேட்டி எடுக்க அனுப்பலையாம். ரெண்டாவது அவங்க பத்திரிகையிலே தாடி வெச்ச, பையன் சொன்ன அடையாளங்கலா எந்த நிருபரும் இல்லையாம். ஸோ, இது எமோஷனலா திடீர்னு ரியாக்ட் பண்ணி நடந்த கொலை இல்லை. பிளான் மர்டர் சார்."

"ஆனா நான் அப்படி நினைக்கலை. நிச்சயமா இது திட்டமிட்ட கொலையா தான் இருக்கணும்னு அபிப்ராயப்படறேன் தயாளன்."

"அதைத்தான் சார் நான் இங்கிலீஷ்ல சொன்னேன்."



இன்ஸ்பெக்டர் அவரை முறைத்துவிட்டு ராஜன் பக்கம் திரும்பி, "சார், நீங்க யாரை சந்தேகப்படறீங்கன்னு சொன்னாதான் பரவால்லை" என்றார்.

"சார் நீங்களும் நூறு தடவை இதையே கேட்டுட்டீங்க. அவளுக்கு கொலை செய்யற அளவுக்கு பகை யாரும் இல்லாதபோ நான் யாரென்று குறிப்பிட்டுச் சொல்றது?" என்றார் ராஜன்.

இன்ஸ்பெக்டர் தயாளனைப் பார்த்துவிட்டு, "அப்போ, நம்ம அதிரடி கேள்விகள்ல இறங்கிட வேண்டியதுதான். எக்ஸ்க்யூஸ் மீ சார். உங்களுக்கு ரகசியத் தொடர்பு எதுவும் உண்டா?"

"நான்சென்ஸ்!"

"உங்க மனைவிக்கு உண்டா?"

"இடியாட்டிக் கேள்வி!"

"சரி, விடுங்க. உங்க மனைவிக்கு இப்ப இல்லைன்னாலும் பழைய காதல் ஏதாச்சும் உண்டா? ஏன் கேக்கறேன்னா, சமீபத்தில நடந்த ஒரு கொலைல கூட யாரையும் சந்தேகப்பட முடியலை. கடைசில பார்த்தா பழைய காதலன்தான் திடீர்னு வெளியாகி வந்து கொன்னுட்டான். அதனால கேட்டேன். முறைக்காதிங்க. கேக்க வேண்டியது எங்க கடமை."

"முறைக்கலை சார். யோசிக்கிறேன். அமுதா முதல்ல கணேசபாண்டியன்னு ஒருத்தனோட சிநேகமா பழகினா. என் அறிமுகம் கிடைச்சதும் என்னை ஆழமா நேசிக்க ஆரம்பிச்சு அவன்கிட்டேர்ந்து விலகினா."

"போச்சுடா! அந்த கணேசபாண்டியன் பாவம்!" என்று நினைத்துக் கொண்டார் தயாளன்.

"தட் ஈஸ் தி பாயிண்ட். தயாளன், எப்படி கொக்கி

போட்டு வரவழைச்சேன். பாருங்க. இதெல்லாம் நீங்க கத்துக்கணும். பை தி பை. அந்த கணேச பாண்டியன் அட்ரஸ் உங்களுக்குத் தெரியுமா?" என்றார் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன்.

******

அந்த தனியார் ஏற்றுமதி நிறுவனத்தின் அலுவலகத்தில் உதவி மேனேஜராக பணிபுரியும் கணேசபாண்டியன் தன்னுடைய தனியறையில் எதிரே அமர்ந்திருந்த இன்ஸ்பெக்டர் புருஷோத்தமனையும், சப்-இன்ஸ்பெக்டர் தயாளனையும் பார்த்து நிதானமாய் பேசினான்.

"சார், அமுதா கொலை செய்யப்பட்டதே இப்ப நீங்க சொல்லித்தான் எனக்குத் தெரியும். நான் அவங்களை நேசிச்சது உண்மைதான். ஆனா இப்போ இல்லை. ரெண்டு வருஷம் முன்னாடி ராஜன் உவங்களுக்கு தனியா பெரிய ஆஸ்பத்திரி கட்டித் தர்றேன்னு சொன்னதும் என்னை மறந்துட்டு அவரைக் கல்யாணம் செய்துகிட்டாங்க. எனக்கு கோபமா இருந்திச்சு. ஆத்திரமா இருந்திச்சு. என்ன செய்ய முடியும்? கொஞ்ச நாளா தாடி வளர்த்துக்கிட்டு கவிதை எழுதிகிட்டுத் திரிஞ்சேன். அப்புறம் இந்த வேலை கிடைச்சதும் மனசு சகஜ நிலைக்கு வந்துடுச்சி. இப்பக்கூட அமுதா செஞ்ச துரோகத்தை நினைச்சா ஒரு வேகம் மனசுல வரும். ஆனா, கொலை செய்யற அளவுக்கு வெறி ஏற்பட்டதில்லை. இன்ஃபாக்ட் அவங்க தன் முடிவைச் சொல்லிப் பிரிஞ்சதுக்கப்புறம் இந்த நிமிஷம் வரைக்கும் மறுபடி நான் அமுதாவைச் சந்திக்கவே இல்லை. இதுக்கு மேலயும் உங்களுக்கு என் மேல சந்தேகமா இருந்தா என் ஆபீஸ்ல வேலை செய்யற நாப்பத்தி ரெண்டு பேரையும் நீங்க விசாரிச்சுப் பார்க்கலாம். காலைல ஆபீஸ் வந்ததிலேர்ந்து இப்ப நீங்க வர்ற வரைக்கும்



நான் எங்கேயும் போகாம இங்கேயேதான் உட்கார்ந்து ஆபீஸ் வேலைகளைப் பார்த்துக்கிட்டு இருக்கேன்."

அவன் சொல்லி முடித்ததும் புருஷோத்தமன் தன் கைக்குட்டையால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"நீங்க எதாச்சும் பத்திரிகையில நிருபரா வேலை பார்த்திருக்கீங்களா?" என்றார் தயாளன்.

"இல்லை."

"இர்ரெலவண்ட் கொஸ்டியன்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"நீங்க வேஷம் போட்டு நாடகத்தில எப்பவாவது நடிச்சிருக்கீங்களா?"

"இல்லை."

"ஸ்டுப்பிட் கொஸ்டின்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"சரி. நீங்களே கேட்டுக்கங்க" என்ற தயாளன் அந்த அறையை விட்டு வெளியே வந்து அக்கவுண்ட்டண்ட் ஒருவரின் முன்னால் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

தன்னை அறிமுகப்படுத்தி கொண்டு, எதற்காக கணேசபாண்டியனை விசாரிக்க வந்திருக்கிறோம் என்பதைச் சொல்லி காலையிலிருந்து நடுவில் அவர் எங்கேயாவது வெளியே புறப்பட்டுச் சென்று திரும்பினாரா என்று விசாரித்தார்.

"இல்லை சார். இங்கேயேதான் இருக்கார். ஆனா, ஒண்ணு சொல்றேன் சார். அந்த டாக்டரம்மா இவருக்கு செஞ்ச துரோகத்தை இன்னும் இவர் மறக்கலை."

"எப்படி சொல்றீங்க?"

"சமீபத்தில ரோஜா வார இதழ்ல பேட்டி கூட தங்கள் காதல் தோத்துப் போனதுக்குக் காரணம்

டாக்டர் அமுதாதான்னு சொல்லியிருந்தாரே..."

"பேட்டியா? என்ன பேட்டி?

"சார், இதே ரோஜா இதழ்ல ரெண்டு வருஷம் முன்னாடி கடற்கரையில நாலு காதல் ஜோடிகளை சந்திச்சு திடீர்னு பேட்டி எடுத்துப் போட்டிருக்காங்க. அந்த நாலு ஜோடிகள்ல இந்த கணேசபாண்டியனும் அமுதாவும் ஒரு ஜோடி. ரெண்டு வருஷம் கழிச்சு இப்போ அந்த ஜோடிங்க அப்புறம் கல்யாணம் செஞ்சிக்கிட்டாங்களா இல்லையான்னு பேட்டி கண்டு போடறதுக்காக அதே நிருபர் கணேச பாண்டியன் சாரைத் தேடிக்கிட்டு வந்துட்டான். அந்தப் பேட்டி போன வார புக்குல வந்திருந்தது. அதைச் சொன்னேன்."

"அந்த புக் கிடைக்குமா எனக்கு?"

"எங்க ஆஃபீஸ் ரெக்ரியேஷன் கிளப்ல வாங்கறோம். இருங்க, எடுத்துட்டுவர்றேன்."

அவர் புத்தகம் எடுக்கச் சென்ற போது, அறைக்குள்ளிருந்து இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன் வெளிப்பட்டு, "தயாளன், இங்கே யாரோட அரட்டையடிச்சிட்டிருக்கிங்க? வாங்க, போலாம்" என்று வாசலுக்கு நடந்தார். பின்னாலேயே தொடர்ந்தார் தயாளன்.

ஜீப் அருகில் வந்ததும் புருஷோத்தமன், "தயாளன், இந்தாளுக்கு மோடிவ் இருக்கு. அதே சமயம் கொலை நடந்த காலை பதினோரு மணிக்கு இவர் இங்கே இத்தனை பேரை சாட்சி வெச்சிக்கிட்டு வேலை பார்த்துக்கிட்டிருந்திருக்கார். இதனால இவரை ரகசியமா கண்காணிக்கனும். வாங்க, போலாம். என்ன நெளியறீங்க?" என்று ஜீப்பில் ஏறிக் கொண்டார்.

"வயிறு கலக்குது சார். நீங்க போங்க. நான்



ஆட்டோ பிடிச்சிட்டு வந்துடறேன் "என்ற தயாளன் மீண்டும் அந்த அலுவலகத்திற்குள் நுழைந்தார்.

"இதோ இருக்கு இவர் பேட்டி வந்த புக்" என்று அந்தப் பக்கத்தைப் புரட்டியே நீட்டினார் அக்கவுண்டண்ட்.

வாங்கிப் படித்தார்.

'வாசகர்களே, இரண்டு வருடங்களுக்கு முன்பாக நமது இதழில் 'கடற்கரைக் காதலர்கள்' என்னும் தலைப்பில் நான்கு காதல் ஜோடிகளின் பேட்டிகளை வெளியிட்டிருந்தது நினைவிருக்கலாம். அந்த ஜோடிகள் வாழ்வில் ஒன்று சேர்ந்தார்களா என்று அறிய ஒரு ஃபாலோ-அப் பேட்டியாக அந்த காதலர்களைத் தேடியலைந்து விசாரித்தோம். விசாரித்ததில் இரண்டு ஜோடிகளின் காதல் கை கூடி அவர்கள் திருமணம் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ்வதும், இரண்டு ஜோடிகள் பிரிந்து காதல் தோல்வியை அடைந்ததும் தெரிய வந்தது. சம்பந்தப்பட்ட காதலர்களின் பேட்டி இனி...'

.....என்று துவங்கிய அந்தக் கட்டுரையில முதல் இரண்டு காதலர்கள் 'தங்கள் காதல் எப்படி வெற்றி பெற்றது என்பதை விளக்கியிருந்தார்கள்.

மூன்றாவதாக கணேச பாண்டியனின் பேட்டி. அதில் கணேசபாண்டியன் தன் காதலுக்குத் தோல்வி ஏற்பட்டதற்கு டாக்டர் அமுதாவின் பேராசையும், துரோக எண்ணமுமே காரணம் என்றுக் குற்றம் சாட்டியிருந்தான். கணேசபாண்டியனின் புகைப்படமும் அருகில் வெளியாகியிருந்தது.

நான்காவது காதலனின் புகைப்படம் பார்த்துத் திகைத்தார் தயாளன். அது லாக்கப்பில் சித்ரவதைக்கு உட்பட்டுக் கொண்டிருக்கும் சுந்தரின் புகைப்படம்.

சுந்தர் தன் பேட்டியல் தன் காதலி திவ்யா

வசதியான தொழிலதிபர் மாப்பிள்ளையாகக் கிடைத்ததும் தன்னை அலட்சியப்படுத்தி உதறி விட்டதாக ஆவேசத்தோடு குறிப்பிட்டிருந்தாள்.

தயாளனுக்கு இப்போது கொலை செய்யப்பட்ட திவ்யா மற்றும் டாக்டர் அமுதா இரண்டு பேருக்கும் ஒரு ஒற்றுமை இருப்பது புரிய வந்தது.

இரண்டு பேரும் தங்கள் காதலைக் குழி தோண்டிப் புதைத்து, காதலர்களுக்கு துரோகம் செய்தவர்கள்.

போனில் ஒருவன் பேசி சுந்தர் குற்றவாளி இல்லை என்றானே, யார் அவன்? அவன்தான் குற்றவாளி! இரண்டு கொலைகளையும் அவன்தான் செய்திருக்கிறான்.

யார் அவன்?

அந்தக் கட்டுரையை எழுதிய நிருபர் யார் என்று பார்த்தார் தயாளன். தியாகருபன் என்று போட்டிருந்தது.

ஒரு வேளை இந்த தியாகருபன்தான் கொலைகாரனா?

தயாளன் உடனே ரோஜா வார இதழின் அலுவலகத்திற்குப் புறப்பட்டார்.

நின்
அருகாமையில் வேகமாகவும்
தூரத்தில் மெதுவாகவும்
சுழல்வதுமாய் உலகம்;
உன்னால்
பைத்தியமாகிவிட்டது அதுவும்!



# 16

இரவு மணி ஒன்பது.

ஆல் இந்தியா ரேடியோ வாசலில் ஒரு ஆட்டோ பிடித்துத் தன் வீணையை ஏற்றிக் கொண்டு தானும் ஏறி அமரும் முன்பாக வெற்றிலை எச்சிலை வெளியேத் துப்பினார் வித்வான் சுப்பிரமணி. ஆட்டோ புறப்பட்டு கோட்டூர்புரத்தில் தன் ஏரியா வருவதற்குள் சின்னதாக ஒரு தூக்கம் முடித்துவிட்டார்.

"சார், தெரு சொல்லுங்க" என்று ஆட்டோக்காரன்தான் அவரை எழுப்பினான்.

கண்களை உதறி சுதாரித்துக் கொண்டு வழி சொன்னார். தன் வீட்டு வாசலில் இறங்கிக் கொண்டு, ஆட்டோவை அனுப்பிவிட்டு, வீணையோடு வந்து பெல் அடித்துவிட்டு, "சௌந்தர்யா" என்று குரலும் கொடுத்தார்.

தாழிடப்படாத கதவு, இவரின் வீணையின் குடம் பட்டுத் தானே திறந்து கொள்ள, உள்ளே வந்த சுப்பிரமணி அலறி விட்டார்.

சௌந்தர்யா தரையில் கிடந்தாள். நாக்கு கொஞ்சம் வெளியே நீட்டியிருக்க, கழுத்தில் நைலான் கயிறு சுற்றியபடி இருக்க, சர்வ நிச்சயமாக செத்துப் போயிருந்தாள்.

சுப்பிரமணி வீணையைப் போட்டுவிட்டு போலீசுக்குப் போன் செய்ய ஓடினார்.

"உங்க மச்சினி சௌந்தர்யா சமீபத்தில

யாரோடவாச்சும் சண்டை போட்டானா?" என்றார் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன் பாடியைப் பார்த்தபடி.

"இல்லை சார்" என்றார் வாயில துண்டு பொத்திய வித்வான்.

அரை மணி நேரம் அவரை விசாரித்துவிட்டு அவர் வீட்டுக்கு வெளியே வந்து தம் பற்ற வைத்தபோது கிடைத்த அவகாசத்தில் தயாளன் அவரை விசாரிக்கத் துவங்கினார்.

"நான் கேக்கறதுக்கு நல்லா யோசிச்சு பதில் சொல்லுங்க. சௌந்தர்யா யாரையாச்சும் காதலிச்சு அப்புறம் அந்தக் காதலனுக்கு துரோகம் செஞ்சதா?"

சுப்பிரமணி தயங்கி, பின் சொன்னார். "சார் ஊர்ல ஒரு பையனோட பழகிட்டு இருந்தா. நான்தான் உன் அழகுக்கு சினிமால பிரமாதமா முன்னேறலாம்னு சொல்லி அழைச்சிட்டு வந்துட்டேன். அந்தப் பையன்கிட்டே இவளுக்கு வேற இடத்தில் நிச்சயமாய்டுச்சின்னு சொல்லி நாடகமாடி கழட்டி விட்டுட்டு கூட்டிட்டு வந்தேன்."

"வெரிகுட். இந்த விஷயத்தை நீங்க யார்கிட்டயாவது சொன்னீங்களா?"

"இப்ப உங்ககிட்டதான் சொன்னேன்."

"வேற யார்கிட்டயாவது சொன்னீங்களா?"

"இதை எப்படி சார் சொல்ல முடியும்? இப்போ அவளே செத்துட்டாங்கிறதாலயும், போலீஸ்கிட்ட மறைக்கக் கூடாதுங்கறதாலயும் சொல்றேன்."

"சரி. சௌந்தர்யா யார்கிட்டயும் சொல்லிருப்பாளா?"

"அவ யார்கிட்ட சொல்லப் போறா?"

"சார், சமீபத்தில திவ்யா, டாக்டர் அமுதா ரெண்டு



பேரும் கொலை செய்யப்பட்டதை பேப்பர்ல படிச்சிருப்பீங்க. அந்தப் பொண்ணுங்களும் காதலர்களுக்கு துரோகம் செஞ்சவங்க. இப்போ சௌந்தர்யாவுக்கு அதே காரணம் இருக்கு. அதனால மூணு பேரையும் கொலை செஞ்சது ஒரே நபரா இருக்கலாம். அந்த நபர் ரோஜா பத்திரிகையோட நிருபர் தியாகருபனா இருக்கலாம்னு நான் சந்தேகப்படறேன். அந்த தியாகருபன் போன வாரம் பத்திரிகையிலேர்ந்து விலகிட்டான்னு அவங்க ஆபீஸ்ல சொன்னாங்க. தங்கியிருந்த ரூமையும் காலி பண்ணிருக்கான். அவன் எங்கே இருக்கான்னு தேடிக்கிட்டு இருக்கோம். சமீபத்தில சௌந்தர்யாவைப் பார்க்க நிருபர்னு சொல்லிட்டு யாராச்சும் வந்தாங்களா?"

"இல்லை சார்."

"வேற யாராச்சும் சமீபத்தில பழக்கப் படுத்திக்கிட்டாங்களா?"

"இல்லையே சார். சமீபத்தில பக்கத்தில இருக்கிற போட்டோ கிராபர் ஈஸ்வரை விட்டு இவளை ஸ்டில் எடுக்கச் சொன்னேன். எடுத்தார். அப்புறம் எடுத்ததை பிரிண்ட் போட்டுக் கொடுக்க வந்தார். அவர்கிட்ட கொஞ்சம் சிரிச்சுப் பேசினா. ஆனா அவர் அப்பாவி சார், காரணமில்லாம அவரைப் போய் இதில சம்பந்தப்படுத்த முடியாது."

நண்பரின் சட்டைப்பையில் துவாரம் இருக்கும்போது அதில் நாணயங்களை போடுவதின் மூலம் அவருக்கு உதவி செய்ய முடியாது.

டக்ளஸ் ஹட்

"நீங்க நபரைக் காமிங்க சம்பந்தப்படுத்த முடியுமா, முடியாதான்னு நாங்க யோசிச்சுக்கறோம்."

"பக்கத்திலதான் வீடு சார். ஈஸ்வர்னு பேரு, ஒரு அட்வர்டைஸ்மெண்ட் கம்பெனில வேலை பார்க்கறார்."

"கல்யாணமானவரா?"

"இல்லை, அவர் மட்டும்தான் தனியா இருக்கார்."

"சரி, நான் விசாரிச்சுக்கறேன்." என்று வீட்டின் அடையாளத்தைத் தெரிந்து கொண்ட தயாளன் புறப்பட்ட போது உள்ளே வந்த புருஷோத்தமன், "நான்தான் க்ளியர்கட்டா எல்லா கோணத்திலேர்ந்தும் விசாரிச்சுட்டேனே. அப்புறம் நீங்க வேற ஒரு தடவை எல்லாத்தையும் விசாரிச்சிங்களா? என்னாச்சு ஆம்புலன்ஸ்? இன்னொரு தடவை போன் பண்ணிட்டு வாங்க" என்றார்.

தயாளன் தலையை ஆட்டிவிட்டு ஈஸ்வரின் வீட்டுக்கு வந்து அழைப்பு மணியை ஒலிக்கச் செய்தார்.

கைலி, பனியனுடன் இருந்த ஈஸ்வர் வந்து கதவைத் திறந்தான்.

"மிஸ்டர் ஈஸ்வர்?"

"நான்தான். என்ன விஷயம்?"

"நான் உள்ளே வரலாமா? கொஞ்சம் விசாரிக்கணும்."

வழிவிட்டான். உள்ளே வந்தவரை நாற்காலி காட்டி அமரச் சொல்லித்தானும் அமர்ந்தான்.

"என்ன விசாரணை?"

"இதே தெருவில வீணை வித்வான் சுப்பிரமணி இருக்காரே, அவர் மச்சினி சௌந்தர்யா கொலை செய்யப்பட்டிருக்கா!"



"மை காட்! எப்போ?"

"அநேகமா ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி கொலை நடந்திருக்கலாம். அவளை விதவிதமா நீங்க போட்டோ எடுத்துக் கொடுத்திங்களாமே."

"ஆமாம். அதுக்கென்னா?"

"பல உடைகள்ல அவளைப் பார்த்ததில சபலப்பட்ட நீங்க வித்வான் இல்லாத நேரத்தில சௌந்தர்யாவை உங்க ஆசைக்கு இணங்க கூப்பிட்டு, அவ மறுத்ததால ஆத்திரப்பட்டு நைலான் கயிறு போட்டு கொலை செஞ்சிருக்கலாம்னு அவர் சந்தேகப்படுச் சொன்னதாலதான் நான் விசாரிக்க வந்திருக்கேன்" என்ற தயாளன் ஈஸ்வரின் முகத்தில் ரியாக்ஷனை கவனித்தார்.

எந்தச் சலனமுமில்லாமல் இருந்தான். புன்னகைத்தான்.

"என்ன சார் இது. அந்தப் பொண்ணை போட்டோ எடுத்துக் கொடுத்ததுக்காக எக்குத்தப்பா இதில என்னை இழுத்துவிடப் பார்க்கறிங்களே..."

"அப்படி இல்லை. நீங்களோ கல்யாணமாகாதவர். வாலிப வயசு. அந்தப் பொண்ணு அழகான, வயசுப் பொண்ணு. ஒரே தெரு. நெருக்கமா நின்னு போட்டோ எடுத்திருக்கீங்க. அதனால அவர் சந்தேகப்படறதில தப்பு இல்லையே."

"சந்தேகப்படறதுன்னு ஆரம்பிச்சா யார் வேணும்னாலும் யாரை வேணும்னாலும் சந்தேகப்படலாம் சார். அந்தாள் அவளோட அக்கா புருஷன். சினிமா சான்ஸ் வாங்கித் தர்றேன்னு ஊர்லேர்ந்து அவளைக் கூட்டிட்டு வந்து கெடுத்து, பல பேருக்கு கூட்டிக் கொடுத்துக்கிட்டிருக்கான் சார். அந்தாளு அவளை வெச்சு சம்பாதிக்கிறான். இதில அவளுக்கு இஷ்டமில்லை. அவளை சித்ரவதை

செஞ்சிட்டிருக்கான் ஸார் அந்தாளு- அதனால அவங்களுக்குள்ளே தகராறு வந்து அவரேக் கூட அவளை கொலை செஞ்சிருக்கலாமில்லையா? சந்தர்ப்ப வசத்தால நான் இதில சிக்க வைக்கப்பட்டிருக்கேன்" என்றான் ஈஸ்வர்.

"சரி. இதெல்லாம் உங்களுக்கு எப்படி தெரியும்?"

"போட்டோ எடுத்த சந்தர்பத்தில தனிமை கிடைச்சப்ப அவளேதான் சொன்னா."

"அப்போ தன்னோட பழைய காதலைப் பத்தியும் அந்தக் காதலனுக்கு துரோகம் செஞ்சிட்டு வித்வான் அவனை மெட்ராஸ் அழைச்சுட்டு வந்ததைப் பத்தியும் கூட உங்ககிட்ட சொல்லியிருக்கணுமே..."

"ஈஸ்வர் கொஞ்சம் நிதானித்தான். என்ன பதில் சொல்வது என்று சற்றே யோசித்தான்.

"இல்லையே இந்த விஷயம் சொல்லலையே" என்று அவன் சொல்லி முடித்ததும் அவன் முகத்தில் இடி போல இறங்கியது தயாளனின் குத்து!

அவன் தடுமாறி விழுந்து எழுந்ததும் மீண்டும் முஷ்டி மடித்துக் குத்தினார்.

"டேய்! நான் போலீஸ்காரன். எவ்வளவு பேரைப் பார்த்திருப்பேன். என்கிட்ட லொள்ளு பண்றியே! நீதான் கொலைகாரன்னு உன்கிட்ட பேச ஆரம்பிச்ச கொஞ்ச நேரத்திலயே தெரிஞ்சுக்கிட்டாச்சு. நீ போன்ல குரல் மாத்திப் பேசினப்போ 'எக்குத்தப்பா, அந்தாளு, சித்ரவதை, சந்தர்ப்பவசம்' -இந்த வார்த்தைகளை யூஸ் செஞ்சே. இப்போ உன்னை விசாரிச்சப்பவும் இதே வார்த்தைகளை யூஸ் பண்ணி பதில் சொன்னே. அதே தொனியில! இயல்புடா இது! இப்படித்தான் சின்ன விஷத்தில மாட்டிக்குவானுங்க. இன்னும் அடி வாங்கணுமா? சொல்றியா?" என்றார் தயாளன்.



மூக்கிலிருந்து ரத்தம் வழிய நின்ற ஈஸ்வர். "யெஸ். நான்தான் கொலை செஞ்சேன். வாழ்க்கையில வெற்றிக்கோட்டைத் தொடறதுக்காக காதலை கொச்சைப்படுத்தினவ என் காதலி. அவ எனக்கு துரோகம் செஞ்சா. ஆனா, அந்த துரோக நெருப்பு எனக்குள்ளே அடங்கலை. ரோஜா புக்குல பேட்டி பார்த்ததும் என் காதலி மாதிரியே அவங்க காதலர்களுக்கு துரோகம் செஞ்ச திவ்யாவையும், டாக்டர் அமுதாவையும் கொலை செய்யத் தீர்மானிச்சேன். திட்டம் போட்டு செயல்படுத்தினேன். சௌந்தர்யாவும் அதே கேஸ்தான்னு தெரிஞ்சதால அவளையும் கொலை செஞ்சேன்." என்றார்.

தயாளன் அவனைக் கைது செய்து அழைத்து வந்து இன்ஸ்பெக்டர் புருஷோத்தமனிடம் விவரம் சொல்ல...

புருஷோத்தமன் கைக்குட்டை எடுத்து தன் முகத்தில் வியர்வையையும், அசட்டையும் சேர்த்துத் துடைத்துக் கொண்டு "தயாளன், என்னோட டிரைனிங்னால நீங்க திறமையா செயல்பட்டீங்கன்னா அதில பெருமை எனக்குத்தான்" என்றார்.

தயாளன் 'ச்சீ! போ!' என்பதாக ஒரு பார்வை பார்த்தார்.

முற்றும்

பள்ளியில் பாடத்தை கற்றுக்கொண்டபின் பரீட்சை எழுதுகிறோம். ஆனால் வாழ்க்கையிலோ பரீட்சையின் பின்தான் பாடம் படிக்கிறோம்.

- யாரோ